பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 22 ஜா அவ்: 14 இதழ்: 82
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-5-77

## மூதறிஞருக்கு காங்கேசனில் சிலை
### ஜெயபாலசிங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம, புதன்

தமிழ்மக்களை ஆறுத்துய ரில் விட்டுச் சென்ற ஈழத்துக் காந்தி தந்தை செல்வநாயகத் திற்கு சிலைஅமைக்க காங்கே சன்துறைப் பட்டினசபையின் முன்னைநாள் தலைவரும், பிரபல கப்பல் ஏஜெண்டுமான திரு. க. ஜெயபாலசிங்கம் முன்வந் துள்ளார்.

காங்கேசன்துறைத் தொகுதி யில் வாழும் பிரமுகர்கள், வியாபார ஸ்தாபனங்கள், துறைமுகத் தொழிலாளர் ஆகியோரின் உதவியுடன் இச் சிலை அமைக்கப்படவிருக் கிறது.

காங்கேசன்துறைத்தொகுதி யிலுள்ள உள்ளூராட்சிமன்றங் களுள் முன்னோடியாகத் திகழ்ந்த காங்கேசன்துறைப் பட்டினசபை முன்றலில் இச் சிலையை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமென திரு. க. ஜெயபாலசிங்கம் நமது நிருப ரிடம் தெரிவித்தார். பட்டின சபைக் காணிக்குள் சிலை அமைக்க அரசாங்கம் அனு மதி வழங்கத் தவறின் காங் கேசன்துறைச் சந்தியில் பஸ் நிலையத்துடன் இச்சிலை அமைக்கப்படுமென அவர் கூறினர்.

காங்கேசன்துறைப் பட்டின சபையின் முன்னைநாள் தலை வர் திரு. இ. குருசாமி, உப தலைவர்களான திரு.ச. சிவ ஞடியார், திரு. டி. இம்மானு வேல். திரு. ஜி. பேரின்பம் ஆகியோரும் இவ்விஷயமாகத்

(7ம் பக்கம் பார்க்க)

# கூட்டணி அலுவலகத்தில் மன்னர், உடுப்பிட்டி கோஷ்டிகள் சத்தியாக்கிரகம்!

## தந்தை மறைந்த ஒரு வாரத்தில் மீண்டும் பிரச்னை

யாழ்ப்பாணம், புதன்

தந்தை செல்வநாயகத்தின் மறைவினால் சில தினங்கள் ஓய்ந்திருந்த வேட்பாளர் பிரச்னை நேற்று மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தலைமை அலுவலகத்தின் முன் நடந்த சத்தியாக்கிரகத் துடன் தலைதூக்கியிருக்கிறது.

உடுப்பிட்டித் தொகுதியில் திரு மு. சிவசிதம்பரத்தையே நிறுத்த வேண்டுமென்று கோரி பெரிய கோஷ்டியொன்றும் மன்னார்த் தொகுதியில் திரு. யோண் மார்க்கையே நிறுத்த வேண்டுமென்று கோரி திரு. யோண் மார்க் தலைமையில் இருபத்தைந்து பேர் கொண்ட கோஷ்டியொன்றும் இந்தச் சத்தியாக் கிரகத்தை நேற்று நண்பகல் ஆரம்பித்தன.

உடுப்பிட்டித் தொகுதியில் திரு. மு. சிவசிதம்பரத்தையே தமிழர் விடுதலைக் கூட்டணி யின் வேட்பாளராக நியமிக்க வேண்டுமென்று கோரிசுலோக அட்டைகளுடனும் சுலோகங் களைக் கோஷித்துக் கொண்டும் நான்கு மோட்டார் வான்க ளிலும் இரண்டு லொறிகளி லும் வந்த கோஷ்டியினர் முதலில் திரு. சி. கதிரவேலுப் பிள்ளையின் இல்லத்தார்குச் சென்று அவரைச் சந்தித்த னர்.

உடுப்பிட்டித் தொகுதியில் திரு. சிவசிதம்பரத்தையே வேட்பாளராக நியமிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டபோது அந்தக் கோரிக் கையை வேட்பாளர் தெரி வுக்குழுவிடம் தான் சமர்ப் பிப்பதாக திரு. கதிரவேலுப் பிள்ளை தெரிவித்தார்.

இதன்பின் அவர்கள் கூட் டணியின் தலைமைஅலுவலகத் துக்கு வந்து விருந்தையிலும் கட்டிடத்தின் முன்னாலும் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர்.

தலைவர்கள் எவரும் இன்று அலுவலகத்துக்கு வரமாட் டார்கள் என்று அறிவிக்கப் பட்டபோதிலும் தலைவர் களைச் சந்தித்தபின்பே தாங் கள் அங்கிருந்து போகப் போவதாக அவர்கள் தெரி வித்தனர்.

இந்தக் கோஷ்டியில் சுர

(8-ம் பக்கம் பார்க்க)

### வேலரும் மயிலரும்



வேலர்: இப்ப எல்லாரும் பாராளுமன்றம் போகவேணுமென்று உருப்பத்தி ஆடு கினம்...முந்தி எல்லாம் அப்பிடியில்லை...!

மயிலர்: இப்ப எம். பி.க்களுக்கு பென்ஷன் என்ற சூண்டல் குடுக்கப்போகினம். அந்தச் சுண்டல்தான் எல்லாரையும் சுண்டி யிழுக்குது...

--சுந்தர்

## காங்கேசன் தொகுதிக்கு சிவாவை நிறுத்த யோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

காங்கேசன்துறை தொகுதி யில் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம் பரத்தை போட்டியின்றித் தெரிவு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை கூட்டணி வட்டா ரங்களில்எழுந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் போட் டியிடுவதில்லையென கம்யூனி ஸ்ட் கட்சி தீர்மானித்துள்ள தால் திரு. வி. பொன்னம்ப லம் அடுத்த தேர்தலில் போட் டியிடமாட்டார் எனக் கூறப் படுகிறது.

இத்தொகுதியில் போட்டியிட விரும்பும் மற்றவர்களையும் சந் தித்து போட்டியில் இருந்து வாபஸ் பெறுவதற்கு கூட்டணி யினர் முயற்சிக்க வேண்டு மென்ற கோரிக்கையும் எழுந் துள்ளது.

காங்கேசன் தொகுதியில் அபேட்சகர் நியமனம் பற்றி எழுந்துள்ள பிரச்னையை திரு. சிவசிதம்பரத்தை நியமிப்ப தன் மூலம் தீர்த்துவைக்கப் படலாம் என கூட்டணி வட் டாரங்களில் கருதப்படுகிறது.

திரு. எம். சிவசிதம்பரம் இன்று கொழும்பு செல்கின் றார். அவர் மீண்டும்வர ஒரு மாதத்திற்கு மேல் செல்லலாம் எனத் தெரியவருகிறது. இத ஞல் நியமனக்குழு கொழும்பி லேயே நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

## தேர்தல் மாநாடு

யாழ்ப்பாணம், புதன்

ஈழத்தமிழ் தொண்டர்சபை தேர்தல் மாநாடு இன்று பிற் பகல் யாழ்ப்பாணத்தில் நடை பெறவிருக்கிறது.

யாழ். செட்டித்தெரு ஒழு ங்கை 4-ம் இலக்க இல்லத்தில் சபை அமைப்பாளர் திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையில் இம் மாநாடு நடைபெறும்.

இம் மாநாட்டில் வடக்கு, கிழக்கில் உள்ள தொகுதிக ளுக்கு அபேட்சகர்கள் நியமிக் கப்படுவார்கள். (சு)

## செல்வா நினைவாலயத்திற்கு டிக்கட்நிதி வசூல் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

தந்தை செல்வா நினைவா லய நிதிக்கு இதுவரை 30,000 ரூபா சேர்க்கப்பட்டுள்ளது. இதுதவிர மேலும 70,000 ரூபாவை வடபகுதியிலுள்ள வர்த்தகர்கள், டாக்டர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரி டம் சேர்ப்பதற்கு நினைவால யக்குழு ஆயத்தங்கள் செய்து வருகின்றது.

வடபகுதியில் மட்டும் ஒரு லட்சம் ரூபா திரட்டலாம் எனத் தமிழர் விடுதலைக் கூட் டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நம்பிக்கைதெரி வித்தார்.

கடந்த 29ம் திகதி வெள்ளி யிலும் 30ம் திகதி சனியிலும் டிக்கற் விற்பனை மூலம் சேர்க் கப்பட்டமுறை நிறுத்தப்பட்டு விட்டது. இனிமேல் டிக்கட் டுகள் மூலம் ரூபாய்நிதி சேர்க் கப்படுவதாயின் அதற்கான அறிவித்தல்கள் வெளியிடப் படும் எனவும் அதுவரை ரூபாய்நிதியாக டிக்கட்டு விற் பனை நடைபெற மாட்டா தெனவும் இணைச்செயலாளர் களுள் ஒருவரான சட்டத் தரணி திரு. நா. அருணசலம் தெரிவித்தார். (அ)

## கூட்டணித் தலைமையை காங்கிரஸ்குழு சந்திக்கும்

யாழ்ப்பாணம்,புதன்

தேர்தல் விஷயமாகத் தமி ழர் கூட்டணி தலைமைப்பீட த்தையும் நியமனக் குழுவை யம் சந்தித்துப் பேச்சுவார் த்தை நடத்துவதற்கு ஐவர் கொண்ட குழு நேற்று நடந்த தமிழ்க் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நியமிக்கப்பட் டது.

நிர்வாகச் செயலாளர் திரு. ரி. சங்கரப்பிள்ளை இல்லத்தில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமை யில் இக் கூட்டம் நடைபெற் றது.

கூட்டணித் தலைமைப்பீடத் தையும் நியமனக்குழுவையும் சந்திக்கும் குழுவில் கீழ்க்கா ணுவோர் இடம் பெற்றுள்ள னர். திருவாளர்கள் ஆர். என். சிவப்பிரகாசம், ஆர்! சிவபாதசுந்தரம், ஜே. செல்வ நாயகம், ஆர். சிவபாதம், ரி. மகேந்திரராசா ஆகியோர்.

மூதறிஞர் செல்வநாயகத் தின் மறைவிக்கு இக்கூட்டத் தில் அஞ்சலி செலுத்தப்பட் டது.

### ஜி.ஜி.க்கு மணிமண்டபம்

அமரர் ஜி. ஜி. பொன்னம் பலத்திற்கு யாழ். நகரில்மணி மண்டபம் கட்டுவதற்கு ஏற்க னவே நியமிக்கப்பட்ட உப குழு. நிதிசேர்ப்பதற்கான நட வடிக்கையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வெளி யிலும் வளவிற்குள்ளும் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி யினர் திரண்டிருந்தனர்.

உடுப்பிட்டியில் இருந்து லொறிகளிலும் வான்களிலும் வந்த கோஷ்டியினர் சுலோக அட்டைகளுடன் கூட்டம் நட ந்த இடத்திற்கு வந்து உடுப்

(7ம் பக்கம் பார்க்க)

# திரண்டுவந்த ஜனவெள்ளத்தின் தண்ணீர்த் தாகம் தீர்க்க யார் முன்வந்தார்கள்?

## மூதறிஞருக்கு இறுதி அஞ்சலி செலுத்தவந்த பெண்களும் குழந்தைகளும் விடாயினால் சுருண்டனர்

— நமது நிருபர் 'யோகி' —

மூதறிஞர் செல்வா மறைந்த மறுதினம் யாரும் வற்புறுத்த வில்லை. எவரும் வலியுறுத்த வில்லை. வேண்டுகோள் எதுவும் விடப்படவில்லை. அப்படியிருந்தும் யாழ். நகரத்தில் சகல வர்த்தகரும் தாமாகவே கடைகளைப் பூட்டிவிட்டார்கள். கறுப்புக்கொடி ஏற்றிவிட்டார்கள். தேநீர்க்கடைகள் ஹோட்டல்கள் மட்டும் மக்களுக்காக ஒற்றைக்கதவில் திறக்கப்பட்டிருந்தன.

மற்றும் கிராமங்களில் எப்போது கதவடைப்பு, என்று துக்கதினம் என அறியாது வர்த்தகர்கள், கடைகளைப் பூட்டுவதும், திறப்பதுமாக இருந்தனர். சனி அல்லது ஞாயிறுதான் இறுதி அஞ்சலி என அறிவிக்கப்பட்டிருந்ததால் வர்த்தகர்கள் என்ன செய்வதென அறியாமல் தவித்துக்கொண்டிருந்தனர்.

### 'சனிக்கிழமை பூட்டுங்கள்'

இதேசமயம கைத்தொழில், வர்த்தக நிறுவன சமாஜத் தலைவர் ஏ. எம். பூபாலசிங்கம் இறுதி அஞ்சலிதினமான சனிக்கிழமையே கடைகளைப் பூட்டுமாறு விடுத்த வேண்டுகோள் வர்த்தகர்களுக்கு ஆறுதலளித்தது.

மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யாழ். நகர் நோக்கி வரும் மக்களுக்காக தேநீர்க்கடைகளை மட்டும் திறந்துவைக்குமாறு கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

### மக்களும் அஞ்சலியும்

இறுதி அஞ்சலிக்குமுன் இரு தினங்களும் வர்த்தகர்கள் கடைகளைத் திறந்திருந்தபோது வியாபாரம் மந்தமாகவே காணப்பட்டது. காரணம் மக்கள் யாழ். நகருக்கு, மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே வந்தார்களேயொழிய வேறு எந்த நோக்குடனும் வரவில்லை. வியாபாரம் நடைபெறாத போதும் வர்த்தகர்களும் தங்கள் கடைகளுக்கு முன் தோரணங்கள் கட்டுவதிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் கட்டுவதிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் போது வர்த்தகர்கள் மத்தியில் அலங்காரம் செய்வதில் ஏற்பட்ட போட்டா போட்டியை இங்கு தோரணங்கள் கட்டுவதில் காணக்கூடியதாக இருந்தது.

பழக்கடை, வெற்றிலைக் கடை காய்கறிக்கடைகளுக்கிடையே பலத்த போட்டா போட்டி. ஒருவர் ஒரு யார் துணியால் கறுப்புக்கொடி கட்டினால் மற்றவர் இரண்டு யார் துணியில கட்டினர்.

வியாழன், வெள்ளி இரு தினங்களும் யாழ். நகரிலும் சரி மற்றும் கிராமங்களிலும்சரி தேநீர் கடைகள், ஹோட்டல்கள் திறக்கப்பட்டிருந்தன. சந்தைகளிலும் வியாபாரம் நடைபெற்றது.

### பூரண துக்கதினம்

இறுதி ஊர்வலத் தினமான சனிக்கிழமை பூரண துக்க தினம் அனுஷ்டிக்கப்படவேண்டும் எனக் கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். கடந்த காலத்தில் சட்டமறுப்பு மற்றும் போராட்டகாலங்களில் துக்க தினம், ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது தேநீர்க் கடைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. தேநீர்க்கடைகள் ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றுவந்தது. விடுதலைப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் கூட, இந்த நிலையைத்தான் காணக்கூடியதாக இருந்தது,

இப்படியாகப் பழக்கப்பட்டிருந்த மக்கள் குறிப்பாக வெளியூர்களிலிருந்து வந்த மக்கள் தேநீர்க்கடைகள், உணவுச்சாலைகள், ஒற்றைக் கதவிலாவது திறந்திருக்கும் என்ற நம்பிக்கையில் யாழ். நகர் நோக்கி வந்துகொண்டிருந்தனர். தேநீர்க்கடைகளைத் திறந்துவைக்குமாறு கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்திருந்ததையும் மக்கள் மறந்துவிடவில்லை.

### மக்கள் சமுத்திரம்

சனி காலைமுதல் மக்கள் சமுத்திரம் யாழ். நகரை நோக்கி அலைமோதத்தொடங்கியது. காலை 7 மணிக்கே யாழ். துரையப்பா விளையாட்டரங்கு மண்டபத்தில் மக்கள் கூடத்தொடங்கிவிட்டார்கள். காலை 11 மணிக்கு அந்த மண்டபம் நிரம்பி வழிந்தது. தகன நிகழ்ச்சியைத் தங்குதடையின்றிப் பார்த்துவிடவேண்டுமென்ற ஆவல் துடிப்பில் மக்கள் மண்டபத்தின் மேல்படிக் கட்டுகளில் போட்டிபோட்டுக் கொண்டு அமர்ந்தனர். பிற்பகல் ஒரு மணி அல்லது 2 மணிக்கு ஊர்வலம்வந்து சேர்ந்துவிடுமென்ற நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். ஆண்கள் மட்டுமல்ல பெண்கள் சிறுவர்கள் குழந்தைகள் வயோதிபர்கள் இப்படி எல்லாருமே காத்திருந்தனர்.

### தாகத்தால் தவிப்பு

சூரியன் உச்சிநோக்கிச்செல்லச் செல்ல சிறுவர்கள் குழந்தைகள் தாகத்தால் துடிதுடித்துத்தவித்தனர். பெரியவர்கள் ஒருமாதிரித் தங்களைச் சமாளித்துக் கொண்டபோதிலும், பச்சிளம் பாலகர்கள், தாகத்தைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பாவம் தாய்மார்கள் என்ன செய்வார்கள். எழுந்து சென்றால் இடம் பறிபோய்விடும். அப்படிச் சென்றாலும் எங்கு செல்வது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடைகள் எதுவும் இல்லை. கிட்டடியில் கிணறுகள்கூட இல்லை. எதிரிலே புல்லுக்குளம் ஆனால் அந்த நீர் குடிக்க உதவாது.

பிள்ளை தாயின் முகத்தைப் பார்க்க, தாய் தந்தை முகத்தைப் பார்க்க, தந்தை பக்கத்தில் சென்றவர்களைப் பார்க்க, அவர்களும், தவித்துத் துடிக்கும் குழந்தைகளுடன் தண்ணீரைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

### துடித்து அழுதனர்

தவித்துத் துடித்த சிறுவர்கள்,குழந்தைகள், தாகத்தால் அழத்தொடங்கி விட்டார்கள். நேரமோ நண்பகல் 12 மணி ஒருசில பெற்றோர்கள், அங்குமிங்கும் ஓடியாடி சில போத்தல்களில் தண்ணீர்கொண்டு வந்தார்கள். அது எத்தனைபேருக்குக் காணும்.

போட்டி போட்டுக்கொண்டு வாழைமரம் தோரணம் கட்டி துண்டுப் பிரசுரங்களை அடித்துவிட்ட வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து அங்கு திக்குக்கு ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைத்திருந்தால் அதுவே மூதறிஞருக்குச் செய்யும் பெரும் அஞ்சலியாக இருந்திருக்காதா?

### உயர்ந்த அஞ்சலி

அடுக்கடுக்காக, ஐம்பது அறுபது டிராக்டர்களில் அலங்காரம் செய்து, அவசியமில்லாமல் நாள்முழுவதும், யாழ் வீதிகளில் சுற்றிச் சுழன்று வந்த இளைஞர்கள் அதே டிராக்டர்களில், கிடாரம், கிராடமாகத் தண்ணீர் கொண்டுவந்து, லட்சோபலட்சம் மக்களுக்குத் தாகசாந்தியளித்திருநதால், அது வே உயர்ந்த அஞ்சலியாக இருந்திருக்கும். ஆனால் எவருமே அதுபற்றிச் சிந்திக்கவில்லை.

உச்சிவெயில் என்றும் பாராது மண்டபம் நிரம்பி வழிந்தபினவர் மக்கள்மைதானத்தை முற்றுகையிட ஆரம்பித்தார்கள்.

இதேசமயம், வெளியூர்களிலிருந்து அன்றுதான் முதல் முறையாக பஸ்களிலும், லொறிகளிலும், யாழ். நகர் வந்தவர்கள் கோஷ்டி கோஷ்டியாக யாழ்.நகர் வீதிகளில் தேநீர்க்கடைகளைத் தேடி அலைந்து கொண்டிருந்தார். இதே நேரத்தில் மற்றொரு இளைஞர் கோஷ்டியினர் ஒற்றைக் கதவில் திறந்திருந்த தேநீர்க்கடைகளையும் உணவுச்சாலைகளையும் பூட்டுமாறு உரக்கக் கத்திக்கொண்டு சென்றார்கள். சில கடைகளை அந்த இளைஞர் கோஷ்டியினரே இழுத்துப் பூட்டினார்கள்.

### தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தார்களா?

யாழ்நகர் வீதியெங்கும் உயர்ந்தமாடங்களையும் பெரும் வீடுகளையும் காணமுடிகிறது. அங்கு வாழும் செல்வந்தர்கள் தங்கள் வீட்டு வாசலில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து, கொதிக்கும் வெயிலில், தவிக்கும் மக்களுக்குத் தாகசாந்தி அளித்திருந்தால் பெரும் அஞ்சலியைச் செய்தவர்களாக இருந்திருப்பார்கள். யாழ்நகரில் உள்ள வர்த்தகர்கள்கூட குறிப்பாக தேநீர்க்கடை உணவுச்சாலை வாசல்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்துத் தங்கள் தங்கள் அஞ்சலியைச் செலுத்தியிருக்கலாம்.

காங்கேசன்துறை வீதியில் ஒற்றைக் கதவில் திறந்திருந்த சில உணவுச்சாலைகளில் மக்கள் கூட்டம் நிரம்பிவழிந்தது. சோறு இருந்தால் கறியில்லை; கறியிருந்தால் சோறில்லை. எங்கும் இந்த நிலை. பாதிச்சோறு சாப்பிட்டவர் மீதிச் சோற்றுக்காக மணிக்கணக்கில் காத்திருக்கவேண்டிய நிலை. இடியப்பம் சாப்பிட ஆரம்பித்தவர், இனி எப்ப வருமோ இடியப்பம் என எண்ணி, வடை முறுக்கு வாய்ப்பனுடன் பகல் போசனத்தை முடித்துக் கொண்டவர் பலர். மோர்க்கிண்ணம் சொதிக்கிண்ணம் சாம்பார்ச் சட்டி எல்லாமே காலி. இரட்டிப்பு மடங்கு பணமென்றாலும் ஒரு சோடாப் புட்டி வாங்கமுடியாத நிலை. இஞ்சிச்சோடா, பிளேன்சோடாவைக்கூட மக்கள் விட்டுவைக்கவில்லை.

### கண்டதையும் கடித்தனர்

கடைக்குள் சென்றவர்கள் கண்ணாடி அலுமாரிக்குள் காணப்பட்ட அத்தனை தின்பண்டங்களையும் அவை புளிப்பா உறைப்பா இனிப்பா என்றுகூடத் தெரியாதநிலையில் போட்டி போட்டுக் கொண்டு எடுத்துக் கடித்துப் புசித்த காட்சி என்றும் நினைவை விட்டகலாது.

யாழ்நகரில் பெரும்பாலான வீடுகளில் அன்று அடுப்புப் புகையவில்லை. வீட்டில் சமையலில்லை. அதிகாலையிலேயே யாழ் விளையாட்டரங்கிற்குப் பெண்கள் குழந்தைகளுடன் புறப்பட்டுவிட்டார்கள்.

பிற்பகல் ஐந்து மணிக்குத் துரையப்பா விளையாட்டரங்கு நிரம்பிவழிந்தது. காலையில் மண்டபத்தில் இருந்தவர்கள் அசையாமல் அப்படியே இருந்தார்கள். தந்தையின் பூதவுடலைப் பார்த்து இறுதி அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற அவாவில் பத்துமணி நேரமாக காத்திருந்தனர். உச்சி வெய்யில் கொதித்தது. உள்ளங்கால் வெந்தது. ஆனால் நெஞ்சில் ஒரே எண்ணம் ஒரே நோக்கம், ஒரே சிந்தனை தந்தை உருவம் காணாமல் வந்த வழி போகமாட்டோம். என்ற மன வைராக்கியத்துடன் காத்திருந்தனர்.

### கொள்ளை அடித்தனர்

கொள்கைவீரனுக்குஅஞ்சலி செலுத்த வந்தவர்களிடம் கொள்ளைலாபம்அடித்தார்கள் அதுவும்பட்டப்பகலில்பலபேர் முன்னிலையில் ஆறுக்கொரு சோடா ஆனைவிலையில் விற்றார்கள். சாதாரண சர்பத்துக்கு மும்மடங்கு விலை. எல்லாம் முற்றவெளி மைதானத்தில் அமைந்த சில்லறைக் கடைகளில் பெரும் முதலாளிகள்கூட விட்டுவைக்கவில்லை. பஸ்நிலையத்திற்கு எதிரிலுள்ள கடைகளில்கூட தாகத்தால் தவித்த மக்களிடம் ஈவு இரக்கம் காட்டாமல் வசூலித்தார்கள்.

ஊர்வலம் மேடைக்கருகில் வந்துசேர்ந்த கூட்டம் ஆரம்பமானதும் மைதானத்தில் நிரம்பிவழிந்த மக்கள் தண்ணீருக்காகத் தவித்தார்கள். சிறுவர்கள் துடித்தார்கள், தொண்டர்களும் பொலிசாரும் சிலபோத்தல்களில் தண்ணீர் கொண்டுவந்து சிறுவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும் ஆயிரமாயிரம் சிறுவர்களின் தாகத்தை அவர்களால் போக்கமுடியவில்லை.

### நிலமங்கையைக் குளிரூட்டினர்

மாநகரசபை மன்றங்கள், சங்கங்கள் மற்றும் பற்பல கமிட்டிகள், கழகங்கள், அட்டைகளைத் தாங்கி அணியணியாக வந்து அஞ்சலி செலுத்தியதுடன் நின்றுவிடாமல் தண்ணீர்த் தொட்டிகள் அமைத்து லொறி லொறியாகத் தண்ணீர் வழங்கியிருத்தால் மக்கள் மனங்குளிரத் தெரிவிக்கும் நன்றி என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் வீதியிலே, தாகத்தால் நாவரண்டு, நடை தளர்ந்து செல்லும்போது கடைவாசலிலே நீர்தெளித்து நிலமங்கையைக் குளிரூட்டும், செயல் மிக வேதனையாக இருந்தது.

தமிழினதிற்காகத் தமது வாழ்நாள் முழுவதும் தியாகம் செய்த பெருந்தலைவருக்காக, ஐந்துவாரங்கள் அன்ன ஆகாரமின்றிக்கிடந்த தந்தைக்காக, ஒரே ஒரு நாள், விரதம் இருப்பது தமிழனத்திற்குப் பெரிய காரியமல்ல. ஆனாலும் எதிர்கால விடுதலை இயக்கத்திற்கு இப்படியான மனப்போக்கு மிக்க இடைஞ்சலையே அளிக்கும்.

அன்றுதினம் யாழ். ஆஸ்பத்திரிக்குமுன்பாகச் சிலஇடங்களில் சிலர் வீதியில் தண்ணீர் கொண்டுவந்து மக்களுக்குத் தாகசாந்தி அளித்ததைக் கண்டேன். அவர்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். அவர்கள்தான் தந்தைமீது உண்மையான பற்றுடையவர்கள்.

(க—அ)


## விளம்பரம்

### தேவை

அரிசி ஆலைக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தங்க இடம் கொடுக்கப்படும். கொன்ருக்கில் வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், யாழ் அரிசி ஆலை, மானிப்பாய். 6082

### விற்பனைக்கு

ஒரு தென்னம் தும்பு அடிக்கும் மெசினும் 25 HP மோட்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு; நல்லையா தும்புத் தொழிற்சாலை, புங்குடுதீவு-1. 6080

### CLASSES

I. C. M. A., A. C. C. A. Accountancy November 1977, weekend classes Commencing on 7-5-77 at the Education Centre No 22, Ramiah Chettiar Lane, Hospital Road, Jaffna. 6084

## கேள்வி விளம்பரம்

### சுன்னாகம் பட்டணசபை

கீழ்க் காணும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் என்னால் 1977-ம் ஆண்டு மே மாதம் 16-ந் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொரு வேலைகளுக்கும் எதிரே குறிப்பிட்டபடி கேள்விப் பிணைப்பணமும், கேள்விப்பத்திரப் பணமும் செலுத்தி மே மாதம் 13-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேற்கொண்டு விபரங்களை எனது காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விபரம் | வைப்புப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. கலாநிதி சுப்பிரமணியம் வீதி வாய்க்கால் மாற்றி அமைத்தல் | 200/- | 20/ |
| 2. இந்தனை வீட்டுத் திட்டத்துக்கு கிணறு வெட்டல் | 100/- | 15/- |
| 3. 5-ம் வட்டார மயானவீதிக்கு அணைச்சுவர் கட்டல் | 100/- | 15/- |

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டண சபை,
சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
28-04-77.

6083

# அலகாபாத் உயர்நீதிமன்றம் இந்திராகாந்திக்கு நோட்டீஸ்

## நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து இழிவாகப் பேசினாராம்

புதுடில்லி, மே 3

**நீதிமன்றத்தை அவமதிக்கும்முறையில் நடந்து கொண்டதாக முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு எதிராக அலகாபாத் உயர்நீதி மன்றம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.**



நீதிமன்றத்தின் கண்ணியத்தைக் குறைக்கும் விதத்தில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் திருமதி காந்தி தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசியமைக்காகவே இந்த நீதிமன்ற நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் திரு. ராஜ்நாராயணினால் தாக்கல்செய்யப்பட்டிருந்த தேர்தல் ஆட்சேப வழக்கில் திருமதி காந்தி 71-ம் ஆண்டு தேர்தலில் லோகசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் 6-ம் திகதி திருமதி காந்தி தேர்தல் கூட்டம் ஒன்றில் இத்தீர்ப்பைக்கண்டித்துஇழிவான முறையில் பேசியிருந்தார் என்று வழக்கறிஞர் ஒருவர் அலகாபாத உயர்நீதிமன்றத் ஆட்சேபமனு ஒன்றைத்தாக்கல் செய்திருந்ததை அடுத்தே திருமதி காந்திக்கு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### ஏன் தண்டனை வழங்கக்கூடாது

நீதித்துறையையும் நீதிமன்றத்தையும் அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டமைக்காக தங்களுக்கு ஏன் தண்டனை வழங்கக்கூடாது என்று காரணம் காட்டுமாறு திருமதி காந்திக்கு அனுப்பியுள்ள உத்தரவில் கேட்கப்பட்டுள்ளது.

### பத்திரிகை ஆசிரியருக்கும் நோட்டீஸ்

திருமதி இந்திராகாந்தியின் குறிப்பிட்ட கருத்தை வெளியிட்டமைக்காக 'டைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகையின் ஆசிரியருக்கும் வெளியீட்டாளருக்கும் திருமதி காந்திக்கு அனுப்பியது போன்று நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ)

## கேரளத்தில்

## பொலிஸார் அட்டூழியம்!

### விசாரணை நடத்த அரசு உத்தரவு

திருவனந்தபுரம், மே 3

அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்த போது கேரளத்தில் இடம்பெற்ற பொலிஸ் அட்டூழியங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு மத்திய அரசு முன்வந்துள்ளது.

ஜனதா கட்சி எம். பிக்கள் சட்டசபை உறுப்பினர்களின் கோரிக்கையை அடுத்து பொலிசார் அட்டூழியங்கள் பற்றி விசாரணை செய்யுமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

### 61 அட்டூழிய வழக்குகள்

இதே வேளையில் பொலிஸாரின் அட்டூழியங்கள் தொடர்பான 61 வழக்குகள் பற்றிய விபரங்களை ஜனதாகட்சி எம். பிக்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

### ராஜன் விவகாரம்

கேரள என்ஜினியரிங் கல்லூரி மாணவன் ராஜனும் மற்றும் வேணுகோபால், விஜயன் ஆகியோரும் சிறையிலிருந்து காணமற் போன விவகாரம் குறித்து விசாரணை நடத்துமாறும் மத்திய அரசும் உத்தரவிட்டுள்ளது. (இ)

## 3 வருடப் பயிற்சி

உடுப்பிட்டி, செவ்வாய்

மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வராகவும், மன்னார்ப் பங்குக் குருவாகவும் கடமையாற்றிய அருட்தந்தை ச. ஹிலரி ஜெபநேசன், கிறிஸ்துவ குடும்பங்களை வழிநடத்தும் பணியில் சிறப்புப் பயிற்சி பெறும்பொருட்டுக் கனடாவுக்குச் சென்றுள்ளார்.

இவர் அங்கு மூன்று வருட காலம் பயிற்சிபெறுவார். (அ)

## லோகசபைதேர்தல்கூட்டணி

### சட்டசபை தேர்தலிலும் நீடிக்கும்

### ஜனதாகட்சித் தலைவர் கூறுகிறார்

புதுடில்லி, மே 3

லோகசபைத் தேர்தலின் போது இருந்த கட்சிகளின் கூட்டமைப்பு போன்று சட்டசபைத்தேர்தல்களிலும் இருக்க வேண்டும் என்றே ஜனதா கட்சி விரும்புகிறது என்று ஜனதாகட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்தார்.

எனினும் கட்சிகளின் மனப்போக்கைப் பொறுத்தே இந்த தேர்தல் உடன்பாடு இருக்கும் என்றும் அவர் கூறினார்.

### வடக்கிலிருந்த தீவிர போராட்டம் தெற்கில் இல்லை

கடந்த லோகசபைத் தேர்தலில் ஜனநாயகத்தைக்காப்பாற்றுவதற்காக வடக்கில் நிகழ்ந்த தீவிரபோராட்டம் தெற்கில் நிகழவில்லை என்றும் தெரிவித்த திரு. சந்திரசேகர், லோகசபைத் தேர்தலில் ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட வெற்றி நாட்டில் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினார். (இ)

## அமெரிக்க - வியட்நாம் உறவு மீண்டும் மலரும்

பாரிஸ், மே 3

வியட்நாம் யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட அமெரிக்க-வியட்நாம் உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதற்கான பேச்சு வார்த்தைகள் இன்று பாரிஸில் ஆரம்பமாகியுள்ளது.

பொருளாதார ராஜாங்க உறவுகளை மீண்டும் இரு நாடுகளுக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு மீண்டும் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மணிப்பூரில் ஜனதாகட்சி ஆட்சி அமைக்கும்?

புதுடில்லி, மே 3

மணிப்பூர் சட்டசபை உறுப்பினர்கள் 24 பேர் காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளனர்.

இதை அடுத்து மணிப்பூர் சட்ட சபையில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ளது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகியவர்களில் சிலர் ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளனர்.

இதேவேளையில் மணிப்பூரில் ஜனதா கட்சி விரைவில் அரசாங்கம் ஒன்றை அமைக்கும் என்று சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜனப் அலாவுதீன் தெரிவித்துள்ளார். (இ)

## "தேர்தல் கெடுபிடியில்" சக்தியை வீணாக்காதீர்!"

யாழ்ப்பாணம், புதன்

"தேர்தல் அடிபிடிகளுக்கும் தொகுதிப் பங்கீட்டுக்கும் தமது சக்தியை வீணாக்குவதை விடுத்துத் தேசத்தினதும் இனத்தினதும் உண்மையான விடுதலைக்கும், விமோசனத்திற்கும் செயலாற்ற முன்வரவேண்டும்."

இலங்கை வாலிபர் சங்கச் சம்மேளனத்தின் தலைவர்களில் ஒருவரான திரு. கே. செந்திவேல் மேதினத்தையொட்டி இளைஞர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தமது வேண்டுகோளில், "ஒரு சிலரையும் அவர்களைச் சூழ்ந்துள்ள ஒரு சிறு கூட்டத்தினரையும் மேம்படுத்துவதற்குச் சாதாரண இளைஞர்கள் தமது நேரம், காலம், சக்தி அனைத்தையும் செலவுசெய்து தேர்தல் விளையாட்டில் பங்குபற்றவேண்டுமா? தேர்தல் தில்லுமுல்லுகளால் தமிழினத்தின் விடுதலை கிடைத்துவிடுமா? சாதாரண நிலையிலுள்ள நேர்மையான தமிழ் இளைஞர்களின் முன்னுள்ள ஒரே பணி, பாராளுமன்றப் பாதையை விடுத்துப் புரட்சிகர மார்க்கத்தில் அணி திரள்வதேயாகும்."

......

## மொரார்ஜி தேசாய் தமிழ்நாடு வருகிறார்

### தேர்தல் பிரசாரம் செய்வார்

சென்னை, மே 3

தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளுவதற்காக இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இம்மாதம் 17,18-ம் திகதிகளில் சுற்றுப் பயணம் ஒன்றைமேற்கொள்கிறார்.

பிரதமராகப் பதவிஏற்றபின் முதன் முதலாக தமிழ்நாடு வரும் பிரதமருக்கு அமோக வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.



தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தலுக்கான திகதிஇன்னும் வெளியிடப்படாதபோதிலும் ஜனதாக்கட்சி இம்மாதம் 8-ம் திகதியே தனது தேர்தல் பிரச்சாரவேலைகளை ஆரம்பிக்கிறது.

இம்மாதம் 7-ம் திகதி தமிழ்நாடு வரும் மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. ப. இராமச்சந்திரனும் தகவல் துறைஅமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸும் இம்மாதம் 8,9,10-ம் திகதிகளில் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வர்.

இன்னும் ஒரு சில தினங்களில் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுவிடும் என்று ஜனதா கட்சியின் தமிழ்நாடு கிளைச் செயலாளர் திரு. குமரி அனந்தன் தெரிவித்தார். (இ)

## ஜெயப்பிரகாசுக்கு ஆரம்ப சத்திரசிகிச்சை

ஹேக், மே 3

அமெரிக்கா சென்றுள்ள சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு நேற்று சிறிய சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்பட்டது.

இது மிகச் சிறிய இரத்த நாள சத்திரசிகிச்சை ஒன்றும் செயற்கை சிறு நீரகத்தை இயங்கச் செய்வதற்கான விசேட சத்திரசிகிச்சை பின்னர் நடைபெறும் என்றும் அவரைப்பரிசோதித்துவரும் வைத்திய நிபுணர் டாக்டர் ரூபேர்ட் மக் தெரிவித்தார். (இ)

### மணிவாக்கு

தனது உணவுக்குத் தனது நெற்றியில் வியர்வை நிலத்தில் சிந்தும் வண்ணம் உழைத்து, அப்படிஉழைத்ததால் வரும் உணவைப் பிறருக்கும் பங்கிட்டு வாழ்பவனே உண்மையில் நேர்மையானவன்.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## மேதின விழா!

கொழும்பிலும் வெளியிடங்களிலும் இம்முறை நடைபெற்ற மேதின விழாக்களில் இடம்பெற்ற சம்பவங்கள் எவருக்கும் கும் மகிழ்ச்சியளிக்க முடியாது.

ஐந்து அரசியல் கட்சிகள் கொழும்பில் மேதின ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தின.

ஊர்வலங்களில் கலந்து கொண்டவர்கள் உற்சாகத்துடன் ஆவேசமான சுலோகங்களையும் கோஷித்துச் சென்றனர்.

பொதுக் கூட்டங்களில் இடம்பெற்ற பேச்சுக்களில் இம்முறை தொழிலாளர் பிரச்னைபற்றி அதிகம் பேசப்படவில்லை.

இதரகட்சிகளைத் திட்டுவதிலும் அடுத்த பொதுத் தேர்தலைப் பற்றியுமே பேச்சாளர்கள் அதிகம் பேசினர்.

இரண்டு இடங்களில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது. இதில் பலர் காயமடைந்தனர்.

மேதினக்கூட்டம் ஒன்றில் குழப்பமும் ஏற்பட்டது. சில இடங்களில் கல்வீச்சுக்களும் இடம் பெற்றன.

கல்வீச்சுச் சம்பவங்களிலும் பலர் காயமடைந்தனர்.

பஸ்கள் பல சேதமடைந்தன.

ஊர்வலத்தினருக்கிடையில் மோதல்களும் இடம்பெற்றன. நிலைமை மோசமாகாமல் தடுப்பதற்கு இராணுவத்தையும் அழைக்க வேண்டிய நிலைஏற்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தவிர மேதினக் கொண்டாட்டங்களுக்கு கடல் ஊர்வலமாக வந்து திரும்பிய வள்ளம் ஒன்று கவிழ்ந்ததால் பதினொரு பேர் மாண்டு போனார்கள். இன்னும் சிலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமீபகாலத்தில் மேதின விழாக்களில் இந்தமுறை போன்று அசம்பாவித சம்பவங்கள் என்றுமே நிகழ்ந்ததில்லை.

மேதினம் தொழிலாளரினதும் விவசாயிகளினதும் வெற்றி விழாவே.

தொழிலாளரினதும் விவசாயிகளினதும்ஐக்கியத்தின் வெற்றிதான் மேதினவிழா.

ஆனால் இந்த மேதினவிழா நமது நாட்டில் அரசியல் விழாவாக மாறிவிட்டது.

தொழிலாளர் ஐக்கியப் படுவதற்குப் பதிலாகப் பிளவு பட்டுநிற்கின்றார்கள்.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது கட்டுப்பாட்டில் தொழிற் சங்கங்களை வைத்திருக்கிறது.

ஒரு தொழிலில் உள்ளவர்கள் பல சங்கங்களில் அங்கம் வகிக்கின்றார்கள்.

இதனால் தொழிற் சங்கங்களுக்கிடையில் போட்டி ஏற்படுகிறது.

ஒருசில தொழிலாளருடன் ஒரு சங்கம் ஆரம்பிப்பதற்குச் சட்டம் இடம் அளிக்கிறது.

இதனால் அரசியல் கட்சிகள்ஒவ்வொன்றும் தொழிற் சங்கங்களை ஆரம்பித்துத் தமதுநோக்கத்தை ஈடேற்றிக் கொள்கின்றன.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலை ஏற்பட்டால் தொழிலாளர் ஐக்கியம் வலுப்பெறும். வீண்போட்டிகளும் மோதல்களும் ஏற்படமாட்டா.

உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள் என்று ஐக்கியக் குரல் எழுப்பவேண்டிய மேதினத்தில் தொழிலாளர்கள் மோதிக் கொள்வது வெட்கமும் வேதனையுமளிப்பதாகும்.

அரசியல் கட்சிகள் தொழிலாளரை வழிநடத்தும்வரை இந்த நிலைமாறுமென்று சொல்ல முடியாது.

தொழிலாளரே தொழிலாளரை வழிநடத்தும நிலை ஏற்படவேண்டும். அன்றுதான் தொழிலாளரின் உண்மையான ஐக்கியம் ஏற்படும்.

# மூதறிஞர் செல்வா மறைவு உலக மக்களுக்கு பேரிழப்பு

## தேசிய மதகுருமார் சபை செய்தி

ஆனைக்கோட்டை, செவ்

நம்மையெல்லாம் துக்க சாகரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்த மூதறிஞர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கிறிஸ்தவ தமிழ்மகனாக வாழ்ந்தாலும் எம்மதத்தையும் தம்மதமாகக் கொண்டு வாழ்ந்தார் தமிழ்-சிங்களமக்கள் மத்தியிலுள்ள வேறுபாடுகளை, பிரச்னைகளை சமரசமாகத் தீர்ப்பதற்குப் பாடுபட்டவர். இன,மதவேறுபாடுகளை மறந்து மனித முன்னேற்றத்துக்காகப் போராடியவர். அன்னாரின் மறைவு ஈழத் தமிழருக்கு மாத்திரமல்ல, அனைத்துலகமக்களுக்குமே ஒரு பேரிழப்பாகும்.

செல்வாவின்மறைவுகுறித்து தேசிய மததருமார்சபைவெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அமரத்துவம் பெற்றுவிட்ட அன்னருக்குத் தமிழ் இளைஞர்கள் செய்யவேண்டிய கைம்மாறு அமரர் உருக்கொடுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிதையவிடாது அவர் வகுத்த இலட்சியங்களை நிறைவேற்றுவதே யாகுமென்றும் அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாத்வீகம் போதித்த சாந்தசொரூபி

ஈழத்தமிழர் அனைவருக்கும் சாத்வீகத்தையும் நேர்மையையும் போதித்து வந்த சாந்தசொரூபி மூதறிஞர் செல்வநாயகம் நம்மைவிட்டு மறைந்தாலும் அவரது அழியாத சேவை மக்கள் மனதில் தமிழ் மீது அழியாப்பற்றை ஏற்படுத்தியுள்ளது. அவரைப் பிரிந்து ஏங்கும் அனைவருக்கும் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆன்மா ஆண்டவனையடைந்து சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

அகில இலங்கை குருமார் சபை வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தபால் தந்தி ஊழியர் சங்கம் அனுதாபம்

அகில இலங்கை தபால்தந்தி ஊழியர் சங்க யாழ். கிளை விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கைவாழ் தமிழ் மக்களின் மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய பெருந் தலைவர் அமரர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவு அகிலஉலகிலும் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கே பேரிழப்பாகும். அண்மைக்காலத்தில் தமிழ்மக்கள் தங்களின் முப்பெரும் தலைவர்களை இழந்து அனாதைகளாகியுள்ளனர்.

அவர்களுக்கு ஆற்றும் கைம்மாறு அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே.

### தமிழினம் தவிக்கிறது

மூதறிஞர் செல்வா நம் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த ஒரு காந்தியாவர். அவர் போன்றதொரு நேர்மையும் நிதானமும் கண்ணியமும் பொருந்திய தலைவரைஅரசியல் உலகில்காண்பதரிது. அவரைப் பெற்றதால் ஈழத்தமிழினம் பெருமையுற்றது. தமிழினம் தள்ளாத அந்தப்பெரியவரையே மலைபோல் நம்பியிருந்தது. இன்றுஅந்தமலை சாய்ந்துவிட்டது கண்டு கையறு நிலையில் கதறித் தவிக்கிறது.

மானிப்பாய் சங்குவேலி காந்திஜி இளைஞர் முன்னேற்றக்கழகம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

### தமிழர்கள் அனைவருக்கும் பேரிழப்பு

முப்பதுவருட அரசியல் வரலாற்றில் முன்னணியில் நின்று தமிழ்மக்களின் விடுதலைக்காக தமது தனிப்பட்ட வாழ்க்கையையே தமிழினத்திற்காக அர்ப்பணித்த தமிழர்களின் தனிப்பெரும் தலைவராகவும், தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவராகவும் விளங்கிய மூத

([illegible]ம் பக்கம் பார்க்க)

## ஒளி அணைந்து எட்டு நாள்

ஒளி அணைந்து எட்டுநாள்
விழி நனைந்து எட்டுநாள்
பாரினிலே நம் தமிழர்
பதைபதைத்து எட்டுநாள்

அன்புருவாய்த் தென்புருவால்
அறிவுருவாய் பண்புருவாய்
தருவுழிலாய்த் ,தமிழுருவாய்
திகழ்ந்தஎங்கள் உயிர்பிரிந்து — எட்டுநாள்

அலைபுரளும் கால்பேஸில்
நிலைபுரளா நெஞ்சுடனே
தலைநிமிர்ந்து போரிட்ட
மாவீரன் உயிர்பிரிந்து — எட்டுநாள்

சாத்வீக முறையினிலே
சிங்களத்து உரிமை எல்லாம்
செந்தமிழுக் கில்லை யெனச்
சாடியவன் உயிர்பிரிந்து — எட்டுநாள்

தமிழரசு தனியரசு
தமிழர்க்கு வேண்டுமென்று
குடியரசு இலங்கையிலே
போர்தொடுத்த உயிர்பிரிந்து — எட்டுநாள்

— பற்றிமாகரன்

## நாளை கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய்வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளும்இரவு செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரது சொற்பொழிவும் இடம் பெறும். (இ)

## பஸ்சேவை சீர்கேட்டினால் தபால் சேவையும் சீர்கேடாம்

நெல்லியடி, செவ்

பருத்தித்துறை பஸ்சேவைச் சீர்கேட்டினால் வடமராட்சிப் பகுதிக்கான அன்றாட தபாற் சேவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள பருத்திதுறை, புலோலி, நெல்லியடி, கரவெட்டி, அல்வாய், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டமானாறு ஆகிய பகுதி மக்களுக்கு உரிய காலத்தில் கிடைக்கவேண்டிய தபால்கள் யாவும் மேலும் ஒரு நாள் தாமதத்தின் பின்னரே கிடைக்கிறது.

பஸ்சேவைச் சீர்கேட்டினால் இப்பகுதியிலிருந்து கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் தபால்பொதிகள் குறிப்பிட்ட நேரத்தைவிடப் பலமணிநேர தாமதத்தின் பின்னரே எடுத்துச்செல்லப்படுகிறது. இதேபோலவே கொடிகாமம் புகையிரதநிலையத்திலிருந்து வடமராட்சிக்கு வரும் தபாற் பொதிகளும் தாமதமாகவே வந்தடைகின்றன. இதன் காரணமாக இப்பகுதி தபால்ஊழியர்கள் நேரமின்மையால் பிந்திவரும் தபால்பொதிகளைப் பிரித்து உரியவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியாத நிலைமை உருவாகியுள்ளதாம்.

இச்சீரற்ற சேவையினால் பொதுமக்கள் மட்டுமன்றி, தபால் ஊழியர்களும் அன்றாடம் கஷ்டப்படவேண்டியுள்ளது. (அ)

### வருடாந்தக் கூட்டம்

சங்கானை, செவ்.

சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரி பெற்றார்-பாதுகாவலர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் வழக்கம்பரை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்:-

தலைவர்- திரு. ஆ. சின்னையா, உப தலைவர்- திரு. சோ. நரசிங்கம், செயலாளர்கள்- திருவாளர்கள் ப. சி. செல்வநாயகம், கி. வைரமுத்து, தனதிகாரி- இ. அ. சுப்பிரமணியம். (க)

### "நாடு பிரிவதற்குமுன்

# பொருளாதாரவளம் பற்றி சிந்திக்கவேண்டியதில்லை"

யாழ்ப்பாணம், புதன்

"பொருளாதாரம் என்பது நம்மால் நாம் தேடிக்கொள்வது; அதை அன்றே தேடிக் கொள்ளலாம். ஓர் இனம் தனக்கெனச் சுயநிர்ணய உரிமையுடன் பிரியுமுன் பொருளாதார வளம் பற்றிச் சிந்திக்கவேண்டியதில்லை."

தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மாவை. சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது மேலும் கூறியதாவது;

"இன்று தமிழன் என்றொரு இனம், 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வரலாறு இருந்தும் நம்மை ஆளும் சிங்கள அரசாங்கங்கள் எம்மை ஒரு தேசிய இனமாகக்கூட கருதுவதற்கு நினைக்கவில்லை. எனவே நாம் நமது சுயநிர்ணய உரிமைகளைப் பேண ஒன்றுகூடினோம், பயனில்லை. பிரிய முடிவுசெய்துவிட்டோம் நம்மைப் பார்த்துப் பலர் கேட்கிறார்கள்: நீங்கள் உங்கள் பொருளாதாரம் என்ன என்று சிந்திக்கிறீர்களா! நாம் அவர்களைப் பார்த்துக் கூறுகிறோம். நமது பகுதிகளில் தான் பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கும் நெற்களஞ்சியங்கள், கடல்படு வளங்கள் கனிப்பொருட் சுரங்கங்கள் உண்டு. இவைகள் அகப் பொருளாதாரங்களாகும். தருணம் வரும்போது இவைகளைப் புறப் பொருளாதாரங்களாக மாற்றுவோம். விடுதலை பெற்ற நாடுகளான சீனா, ரஷ்யா, வியட்நாம் நாடுகளைப் பாருங்கள். அவர்கள் அன்று பொருளாதாரம் பற்றிச் சிந்தித்தால் வெடிகுண்டுகளால் அவர்களது பொருளாதாரம் சிதைக்கப்பட்டு, விடுதலை பெற்றிருக்க முடியாது. அப்பணம்விடுதலைக்காகச் செலவுசெய்யவும் முடியாது. இதே மாதிரித் தமிழர்களும் தமது பொருளாதாரம் பற்றி நேரத்தைச் செலவிடாது விடுதலைக்காக அதைச் செலவிட்டால், எமது வளங்களைப் பின்னர் பெருக்கி, அகிலம் போற்றும் பொருளாதாரத்தைச் சமைப்போம். அதற்கான விஞ்ஞானிகள், பொருளாதார நிபுணர்கள் எம்மிடந்தான் உண்டு. எனவே அது பற்றிச் சிந்திக்கவேண்டியதில்லை." (க)

# தந்தை மறைவும் யாழ். நகரும்

— கா. யோகநாதன் —

மூதறிஞர் செல்வா மூர்ச்சித்தநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நாள்முதல் மக்கள் தினமும் சென்று அவரது நிலைமைபற்றி அக்கறையுடன் விசாரித்துவந்தார்கள். நாளுக்குநாள் உடல் நலம் அபிவிருத்தியடைந்ததாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து ஆறுதலடைந்தார்கள். விரைவில் சுகம் பெற்று- மீண்டும் மக்கள்மத்தியில் வருவார் என எதிர்பார்த்தவர்களுக்குப் பேரிடிச் செய்தி கிடைத்தது.

மூதறிஞர் செல்வாவின் மறைவுச்செய்திகேட்டுத் தமிழினம் அதிர்ச்சியடைந்தது. அன்று காலைமுதல்மக்கள் ஆஸ்பத்திரியை நோக்கிப் படையெடுததனர்.

## எனக்குமட்டும் அனுமதி

மூதறிஞர் செல்வா, யாழ் ஆஸ்பத்திரி குளிரூட்டிய அறைக்குக் கொண்டுசெல்லப்பட்டபின்னர் அவரைப் பார்ப்பதற்கு எவருக்குமே அனுமதி கிடைக்கவில்லை. உறவினர்களே பார்க்கமுடியாமற்போய்விட்டது. பத்திரிகையாளர் என்ற முறையில் எனக்குமட்டுமே அந்த அனுமதி கிடைத்தது. வேறுஎந்தப் பததிரிகையாளருமே அவரைப் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. கடைசியாக அவரைஉயிருடன் பார்த்தது அன்றுதான். டாக்டர் நற்குணம்தான் இந்தி ஒழுங்கு செய்திருந்தார்.

டாக்டர்கள், நர்சுகள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் செய்த சேவை மிகப்பெரியது. திரு. சந்திரகாசன் கூறியதுபோல சொந்த உறவினரைப் பார்ப்பதுபோல் அவர்கள் மூதறிஞரைக் கவனித்தார்கள். உலகில் எந்தத்தலைவருக்குமே ஆஸ்பத்திரி ஊழியர்கள் சகலரும் ஒன்றுபட்டுச் சிகிச்சையளித்தது கிடையாது.

மூதறிஞரின் பூதவுடல் ஆஸ்பத்திரிக் குளிரூட்டிய அறையிலிருந்து வீதிக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் நடந்தது. கூட்டணித் தொண்டர்களும், இளைஞர்களும், தாங்கள்தான் பூதவுடல்தாங்கிய பேழையைச் சுமந்து செல்லவேண்டுமென உரிமை கொண்டாடினார்கள். ஆனால் ஆஸ்பத்திரி ஊழியர்களும், டாக்டர்களும் அதற்கு மறுத்துவிட்டார்கள். முதலில் மருந்தாளர்களும், பின ஆஸ்பததிரிக் கட்டடப்பகுதி ஊழியர்களும், டாக்டர்களும் பேழையைச் சுமந்து வந்தார்கள். இதிலிருந்து தந்தைமீது அவர்கள் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் எனப் புரிந்துகொண்டேன்.

## சிங்களமக்கள் துக்கம்

ஆஸ்பத்திரியிலுள்ளபார்வையாளர் பதிவுப்புத்தகத்தில் 5 வாரங்களும் 1827 பேர் கையெழுத்திட்டிருந்தனர். கையெழுத்திடாதவர்கள் பல்லாயிரம். யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்ல, மலைநாடு, மட்டக்களப்பு, திருமலைபோன்றஇடங்களிலிருந்தும் வந்து கையெழுத்திட்டிருந்தனர். ஒவ்வொரு நாளும் நண்பகல் 12 மணிக்கும் மாலை 5 மணிக்கும் தந்தையின் நலம்அறிய மக்கள் வந்துகொண்டிருந்தனர். பத்திரிகையை வாங்கினால் முதலில் தந்தையைப்பற்றிய செய்தியைத்தான் துருவித் துருவிப் படித்தார்கள். பதிவுப் புத்தகத்தில் சகல இன மக்களும் கையெழுத்திட்டிருந்தனர். சிங்களமக்கள்கூட ஆஸ்பத்திரிக்கு செல்வாவின்நலமறிய வந்திருந்ததைக் கண்டேன். யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சிங்கள யாத்திரிகர்களின் தனிப்பட்ட பஸ் ஒன்றில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அது மட்டுமல்ல அந்த பஸ்ஸின்கண்ணாடியில் தந்தை செல்வாவின் படங்களும் ஒட்டப்பட்டிருந்தன. தந்தை செல்வாவின் நேர்மைக்குச் சிங்களமக்களும் மதிப்புக் கொடுத்தார்கள்; தனிப்பற்று வைத்திருந்தார்கள்.

## வயோதிபர் அலறல்

மூதறிஞர் செல்வாவின் பூதவுடல் தாங்கியவாகனம், ஆஸ்பத்திரியை விட்டுப் புறப்பட்டது. வீதியில் மக்கள் வெள்ளத்தின் மத்தியில் நான் தத்தளித்துக்கொண்டிருந்தேன். எனக்கருகில் ஒரு குடுகுடுகிழவர்; கண்களிலிருந்து நீர்வழிந்துகொண்டிருந்தது. வாகனம் அவரைக் கடந்துசெல்கிறது! 'ஐயோ தமிழ்போச்சு, தமிழ் போச்சு' எனத் தலையிலடித்துக் கத்தினார் அந்தக்கிழவர். வாகனததின்முன் அமைதியாகச் சென்றுகொண்டிருந்த திரு. அமிர்தலிங்கம் அவரைத்திரும்பிப் பார்த்து ஆறுதல் கூறினார். மற்றும் சிலரும் 'ஐயா, ஐயா' எனக் கதறினர். வீதியில் நின்ற தாய்மார்கள் ஓடிச் சென்று திருமதி மங்கையர்க்கரசியையும், செல்வி அம்பலத்தையும் கட்டிஅணைத்துக் கண்ணீர்விட்டுக் கதறிஅழுதகாட்சி இதயத்தைத்துளைப்பதாகஇருந்தது. கூட்டணிக் காரியாலயம் செல்லும்வரை, எங்கும் சோகமயமாக இருந்தது. வீதிக்கு வீதி, வீட்டுக்குவீடு, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோருமே அழுது புலம்பிக்கொண்டிருந்தனர். சிலர் மயங்கி விழுந்தனர். தமிழினமே கண்ணீர்க் கடலில் மிதந்தது.

## அடங்காத் தமிழரும் பாரியாரும்

அடங்காத்தமிழர் சுந்தரரும், அவர் பாரியாரும் அஞ்சலிசெலுத்தினார்கள். செல்வா சுகவீனமுற்றிருந்தபோது சுந்தரர் ஆஸ்பத்திரிக்கு வந்து மூதறிஞர் செல்வாவைப் பார்க்கவே இல்லை. இதுபற்றி நான் சுந்தரிடம் கேட்டேன். செல்வாவின் நன்மைக்காகவேதான் ஆஸ்பத்திரிக்குச் செல்லவில்லை எனக் கூறினார். அரசியலில் இதுவரை அவர்கள் எதிரும் புதிருமாக இருந்தார்கள். காங்கேசன்துறை உபதேர்தலில் மட்டும் சுந்தரர் பகிரங்கமாக மூதறிஞர் செல்வாவை ஆதரித்தார். காங்கேசன்துறையிலுள்ள தமது ஆதரவாளர்களிடம் செல்வாவை ஆதரிக்குமாறு சுந்தரர் கோரினார். ஆனால் இம்முறை சகல தொகுதிகளிலும்கூட்டணியைஎதிர்த்துப் போட்டியிடுவதற்காக தமிழ்ஈழத் தொண்டர் சபையைச் சுந்தர் அமைத்தார்.

மூதறிஞர் செல்வாவைஆஸ்பததிரியில ஏன் பார்க்கப் போகவில்லை? என்று சுந்தரரிடம் கேட்டேன்.

அவர் கூறினார்: '' நண்பன் செல்வா மயக்கநிலையில் இருக்கிறார். அவரின் உள்ளுணர்வு செயல்பட்டுக் கொண்டிருக்கும் நான் அவரை ஆஸ்பத்திரியில் பார்க்கச்சென்றால் அதுபற்றி டாக்டர்களோ, நர்சுகளோ, அங்குகதைப்பதை. நண்பன் செல்வா கேட்கக் கூடிய நிலையிலிருந்தால் சில சமயம், அதிர்ச்சியினால் அவர் உயிருக்கே ஆபத்தாக முடியும் அந்தப் பொறுப்பை நான் ஏற்கவிரும்பவில்லை. என்றார்,

'ஈழநாடு' விவாத மேடையில் நண்பன் செல்வா தொடர்பாகச்சில கேள்விகளுக்குதான் பதிலளிக்கவேண்டுமென்றும் அக்கேள்விகளுக்கு திரு. செல்வநாயகம் பூரணசுகம் பெற்றபின்னரே பதிலளிக்கப் போவதாகவும் தற்போதையநிலையில் அவர் சுகவீனமுற்றிருக்கையில் அப்படியான பதில் அளிப்பது பண்பல்ல வென்றும் சுந்தரர் கூறியிருந்தார்.

## செல்வாவில் சுந்தரர் தனிப்பற்று

சுந்தரர் மூதறிஞர் செல்வாவிடம் தனிப்பற்று வைத்திருந்தார். 1956 ம் ஆண்டு சுந்தரர் மூதறிஞர் செல்வாவை எதிர்க்கட்சித் தலைவராக்கப் பெருமுயற்சி எடுத்தார். ஆனால் கடைசியில் அதுநிறைவேறாமல்போய்விட்டது.

கூட்டணிக்காரியாலயத்திலிருந்து மூதறிஞர் செல்வாவின் பூதவுடலைத் தாங்கிய வாகனம் பிரதான வீதிவழியாக யாழ் வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தபோது அங்கு மக்கள் வெள்ளம் வரவேற்றது.

## வீரசிங்கம் மண்டபம் கோவில் போலிருந்தது

அங்கு ஜி.ஜி. யின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் அமைக்கப்பட்டிருந்தபந்தலின் கீழ் மூதறிஞரின்பூதவுடல் மலர் மேடையில் வைக்கப்பட்டிருந்தது. அவர் கிறிஸ்தவராக இருந்த போதிலும் தலைமாட்டிலும், கால் மாட்டிலும்பெரிய குத்துவிளக்குகள் எரிந்து கொண்டிருந்தன சாம்பிராணியின் வாசனை எங்கும் பரவிக்கொண்டிருந்தது. மக்கள் அமைதியாக வந்து அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தனர். பலர் கண்ணீர்விட்டுக்கதறி அழுதனர். பலர். பொங்கிவரும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் சோகத்தில் மூழ்கியிருந்தனர்.

மேடையில் பக்திப்பாடல்கள் எந்நேரமும் ஒலித்துக்கொண்டிருந்தன.

மலர்ப்பந்தலின் இடது பக்கத்தில் திருமதி செல்வநாயகம் மற்றும் குடும்பத்தினர் சோகமே உருவாக அமர்ந்திருந்தனர். வலது பக்கத்தல் கூட்டணி பிரமுகர்கள் அமர்ந்து கொண்டிருந்தனர். மற்றையோர் மண்டபத்திற்குள் தரையில் அமர்ந்திருந்தனர். இளைஞர் பேரவையினர் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தனர்.

அன்றிரவே துண்டுப்பிரசுர இயக்கங்கள் ஆரம்பமானது இளைஞர்கள் சந்திக்குச் சந்தி நின்று பஸ்களிலும் வாகனங்களிலும் செல்வாவின் படங்களையும் துண்டுப்பிரசுரங்களையும் ஒட்டிக்கொண்டிருந்தனர்.

அன்று (புதன்கிழமை) செல்வாவின் மறைவுச் செய்தி கேட்டு யாழ். நகரத்தில் உடனடியாகப் பல கடைகள் மூடப்பட்டன. சில கடைகள் ஒற்றைக்கதவில் காணப்பட்டன. தேநீர்க்கடைகள், ஹோட்டல்கள் மட்டும் திறந்திருந்தன.

## தியேட்டர்களுக்கு இளைஞர் கூட்டம்

வியாழக்கிழமை இரவு தியேட்டர்களில் வழக்கம்போலப் படங்கள் திரையிடப்பட்டன. இதனைக்கண்டு கொதித்தெழுந்தது இளைஞர் படை. வவுனியாவிலிருந்து வந்த இளைஞர் கோஷ்டியொன்று படம் காட்டக்கூடாதென்ற இயக்கத்தை வழிநடத்தியது. கூட்டணிப் பிரமுகர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இதற்குத் தலைமை தாங்கினார். சுமார் 300க்கு மேற்பட்ட இளைஞர்கள் தியேட்டர்களுக்குச் சென்றார்கள். 'தந்தை செல்வாவுக்காகத் தயவுசெய்து வெளியேறுங்கள்' என்று கோரியதைத் தொடர்ந்து தியேட்டரிலிருந்த சகலரும் படம் பார்க்காமலே வெளியேறினார்கள். சில தியேட்டர்களில் சில இளைஞர்கள் சினிமா விசிறிகளை வெளியேற்றுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது. அன்றைக்குப் பின் தந்தையின் தகனம் நடைபெறும் வரை சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லை.

## தொண்டர்களும் போலி பாட்ஜ்களும்

புதன்கிழமை இரவு 10 மணிக்கு மேலும், தந்தை செல்வாவுக்கு அஞ்சலிசெலுத்திக்கொண்டிருந்தனர். மக்கள் திரளைக் கட்டுப்படுத்தவும் மற்றும் சேவைகளுக்காகவும் தொண்டர்கள் நியமிக்கப்பட்டனர்.

தொண்டர்களுக்கு பாட்ஜ்களும் வழங்கப்பட்டன. இந்தச் சாக்கில் எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஆயிரக்கணக்கான போலி பாட்ஜ்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதாகக் கூட்டணித் தலைமைப் பீடத்திற்கு வெள்ளிக்கிழமை பிற்பகல் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து ஏற்கனவே வழங்கப்பட்ட கூட்டணிப் பட்டிகள் ரத்துச்செய்யப்பட்டு, சனிக்கிழமை காலையில் தெல்லிப்பழையில் வைத்து உண்மையான தொண்டர்களுக்குப் பட்டி வழங்கப்பட்டது. இதனால் போலிப் பட்டி வைத்திருந்த எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஆத்திரப்படவில்லை. காரணம், எம். ஜி. ஆர். வரமாட்டார் எனச் சனிக்கிழமை காலைப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருந்தது. இதனால் எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஆறுதல் அடைந்துகொண்டு 'நாளை நமதே' எனத் திருப்தியடைந்தார்கள். ('நாளை நமதே' ஞாயிற்றுக்கிழமை திரையிடப்பட்டது. (தொடரும்)

# கணவருடன் செல்ல இளம் பெண் மறுப்பு

யாழ்ப்பாணம், புதன்

இருவருட காலமாக தம்கணவருடன் வாழ்க்கை நடத்திய இளம்பெண் ஒருவர் தம் கணவரை விட்டுப்பிரிந்து தம்தமக்கையின் கணவருடன் வாழ விருப்பம் தெரிவித்ததனை அடுத்து அதற்குப் பொலிசார் அனுமதி வழங்கினர்.

மாதகலைச் சேர்ந்த எம். இராசதுரை (வயது 22) என்பவர் சுன்னுகம் பொலிஸில் செய்த புகார் ஒன்றில் இருவருடங்களுக்கு முன் தமக்குக் கல்யாணம் நடைபெற்றதாகவும் கந்த 17 நாட்களுக்குமுன் குரும்பசிட்டியிலுள்ள தம் தமக்கையின் பிரசவத்திற்குச் சென்றுவருவதாகக்கூறிச்சென்றவர் பின்னர் திரும்பி வரவேயில்லையென்றும் வருமாறு அழைத்தும் வரமறுக்கிறரென்றும் தெரிவித்தார். சுன்னுகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஐனுப் ஈ. ஏ. ஏ.காதரின் உத்தரவின்பேரில் பிரஸ்தாபநபரின் மனைவி பாக்கியத்தை (வயது 52) கான்ஸ்டபிள் ரி. சிவபாலசுந்தரம் பொலிஸ்நிலையத்தில் ஆஜர் செய்தார்.

தமது தமக்கையின் கணவருடனே வாழ்வதற்குத் தமக்கு விருப்பமென்றும் மணமாவதற்கு முன்னர் கூட அவருடன் தமக்குத் தொடர்பு இருந்ததென்றும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் காதர் இவ் விஷயத்தில் தமது அதிகாரம் ஒரு வரையறைக்கு உட்பட்டதென்றபடியால் பாக்கியத்தின் இஷ்டப்படியே அவரை செல்ல அனுமதிப்பதாக முறைப்பாட்டுக்காரரிடம் தெரிவித்தார்.

(உ)

# ஆயுதக்கோஷ்டி பஸ்ஸில் கொள்ளை

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

கோஷ்டி ஒன்று, ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸை மறித்து ஆயுதங்களைக் காட்டிக் கொள்ளையடித்த சம்பவம் நேற்று முன்தினமிரவு நல்லூர்ப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினமிரவு ஆனைப்பந்திக்கும் கட்டப்பிராய்க்குமிடையில் ஒரு காரில் வந்த 4 இளைஞர்கள் பயங்கர ஆயுதங்களைக் காட்டி பஸ்ஸை மறித்து, அதன் சாரதியையும் கண்டக்டரையும் பயமுறுத்தி அவர்களது கைக்கடிகாரங்களைப் பறித்ததுடன், அவர்களிடமிருந்த ரொக்கப் பணம் 250 ரூபாவையும் கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட்டனராம். இது சம்பந்தமாகச் சாரதியும் கண்டக்டரும் பொலிஸில் செய்து கொண்ட புகாரையடுத்துச் சார்ஜன்ட் திரு. பருவா தலைமையில் விசாரணை நடைபெற்றுவருகிறது. (கா-அ)

# மிளகாய் வெங்காய நோய்க்குப் புதுமருந்து

கண்டிக்குளி, செவ்

வெங்காயம், மிளகாய்ஆகிய பயிரினங்களைப் புழுநோய்களிலிருந்து பாதுகாக்கும் இருஇன மருந்துவகைகளை விவசாய இலாகாவின் திருநெல்வேலி ஆராய்ச்சிப்பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

இம்மருந்து வகைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பலவிதமானபரிசோதனைகளில் வெங்காயம், மிளகாய் ஆகிய பயிரினங்களுக்கு ஏற்படக் கூடிய இலையரிபுழுவும், காய் பழகோதியும் வெங்காயத் தண்டுகோதியும் இம் மருந்துகள் அடிக்கப்பட்டவுடனேயே அழித்தொழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அம்புஸ், சுமிசிடின் எனப் பெயரிடப்பட்ட இம் மருந்துகளைவிவசாயிகளின்பாவனைக்கு விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. நா. சிவமுத்துலிங்கம் தெரிவித்தார். (அ)

# காய்கறி கொள்வனவு

நெல்லியடி, செவ்.

வடமராட்சிப்பகுதி விவசாயிகளிடம் பல்வேறு உற்பத்திப் பொருட்களை விற்பனைத் திணைக்களம் கொள்வனவு செய்துவருகிறது.

வெளிச் சந்தையில் நிலவும் சந்தை விலைக்கேற்ப இப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுவருகின்றன. குறிப்பாக செத்தல் மிளகாய், பூசினிக்காய்போன்றவைகளே பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டுவருகின்றன. (அ)



கோப்பாய் வெள்வெருவைப் பிள்ளையார்கோவில் ஆதீன பிரதமகுரு நீ. சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் புதிதாக அமைக்கப்பட்ட கர்ப்பக்கிருக துவிதள விமான கோவிலின் புனருத்தாரண மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இம்மாதம் வரும் 6-ம் திகதி பிரமஸ்ரீ சச்சிதாநந்தேஸ்வரக் குருக்கள் செம்பொற் சோதீஸ்வரசர்மாவின் மிருதங்கவாத்திய அரங்கேற்றம் நல்லை ஞானசம்பந்த ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறுகின்றது. (அ)

"கூட்டுறவு கடைகளில்

# சகலபொருட்களும் விற்பனை செய்யவேண்டும்"

சங்கானை, செ.வ்

அரிசி, மாவு, சீனி ஆகிய பொருட்களை மட்டும் விற்பனை செய்து இயங்கும் கூட்டுறவுக் கடைகள் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. எனவே ஏனைய பாவனைப் பொருட்களையும் கூட்டுறவு கிளைகளில் விற்பனை செய்வதால்தான் கடை லாபம் பெறுவதுடன் அங்கு கடமைபுரியும் ஊழியர்களின் ஊதியத்தையும் பெறக் கூடியதாக அமையும்''

இவ்வாறு கூட்டுறவு பரிசோதகர் திரு. எஸ். யோசேப், சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் வைபவத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. எம். கே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் சகல கிளை குழு அங்கத்தவர்கள் முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர் கூட்டுறவு பரிசோதகர் திரு. யோசேப் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நான் இங்கு வந்து சங்கத்தின் கீழ் இயங்கும் கிளைகளை பார்வையிட்டபோது அவைகள் சரிவர கணக்குகள் வையாது இயங்கி வருவது தெரியவந்துள்ளது. பால் மா, மற்றும் தட்டுப்பாடான பங்கிட்டுப் பொருட்கள் எவ்வாறு பங்கீடு செய்யப்படுகின்றதென்பதையே புரிந்துகொள்ள முடியாத நிலையில் கிளைகள் இயங்கிவருகின்றன.

### லக்ஸ்பிறே விநியோகம்

உதாரணமாக 25 லக்ஸ் பிறேரின் சங்கத்தால் கிளை ஒன்றிற்கு கொடுக்கப்பட்டிருந்தால் 15 மட்டும் விநியோகம் செய்யப்பட்டிருக்கும் அதுவும் எவ்வாறு விநியோகம் செய்யப்பட்டுள்ளதென்பதை விபரம் தெரியாமல் இருக்கும் எஞ்சிய வற்றிற்கும் என்ன நிகழ்ந்ததென நாம் அறிய முடியாது. இவ்வாறுஞ விநியோகம் சங்கக் கிளைகளில் நிகழ்வது தவிர்க்கப்படல் அவசியம். கிளை முகாமையாளர் பங்கீடு செய்வதில் சிக்கல் ஏற்பட்டால் அதனைபெறும்போது தாய்ச்சங்கத்தில் விபரம் அறிதல் வேண்டும் அல்லது கிளைக் குழுவுடன் கலந்து ஆலோசனை பெற்று அதனை விற்பனை செய்தல் வேண்டும்.

எனவேதான் கூட்டுறவுக் கடைகள் தனியார் வியாபாரிகளுடன் போட்டிபோடும் வகையில் சகல பொருட்களையும் கொள்முதல் செய்து வியாபாரத்தை பெருக்கி பொதுமக்கள் ஆதரவை பெறல் வேண்டும். நேர்மை, கடமை, கண்ணியத்துடன் கடமை புரியும் ஊழியர்கள் இருக்கும் ஸ்தாபனம் வளர்ச்சி பெறும் என்பது எமது அனுபவரீதியாகக் கண்ட உண்மை'

### சங்கத்தில் பணம் இல்லை

தலைவர் திரு. எம். கே. சுப்பிரமணியம் கூறியதாவது: கடந்த காலங்களில் இங்கு நிகழ்ந்த சம்பவங்கள் சங்க வளர்ச்சியை பெரிதும் பாதித்துள்ளது. பொருட்கள் பெறுவதற்கே சங்கத்தில் பணம் இல்லை. இதனை பலதரப்பட்ட கஷ்டங்களுக்கிடையே வங்கியில் சொற்ப அளவில் பணம் பெற்றுத்தான் சங்கத்தை இயங்கவைக்கும் நிலையில் உள்ளோம். சிலகிளைகளில் களவு நடைபெற்றுவருகிறது. இதற்கான பாதுகாப்பை கிளைக் குழுக்களும் கிளை முகாமையாளரும் தேடவேண்டும்.

மீண்டும் எங்கள் சங்கம் வளர்ச்சிபெற ஊழியர்களின் ஏகோபித்த ஒத்துழைப்பு வேண்டும். (க)

## நலன்புரிச்சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், புதன்

தேசியசேமிப்பு வங்கி யாழ். கிளையின் ஊழியர் நலன்புரி சங்கம் கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இச் சங்கத்தின் போஷகராக வங்கி முகாமையாளர் அ. பாலசிங்கமும் தலைவராக மு. ஜகானும், செயலாளராக சி. சிவராசாவும், பொருளாளராக க. கமலசேகரமும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்துடன் மூவர்கொண்ட செயற்குழுவும் இருவர் கொண்ட கணக்கு பரிசோதகர் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

கூட்டத்தில் ஊழியர்களின் நலன்பேணும் பொருட்டு வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (இ)

## தீப்பெட்டி விற்றவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், புதன்

கட்டுப்பாட்டு விலையைமீறி அதிகவிலைக்குத் தீப்பெட்டி விற்ற ஒருவர் விலைக்கட்டுப்பாட்டுஅதிகாரிகளால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். நரிக்குண்டடி றக்கா வீதியில் உள்ள கடைமுதலாளி ஒருவர் 10 சதம் விலை குறிக்கப்பட்ட தீப்பெட்டி ஒன்றை 25 சதமாக விற்கமுயற்சித்த போது விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார்.

இதேபோன்று யாழ்ப்பாணம் ராசாவின் தோட்ட வீதியிலுள்ள கடைக்காரர் ஒருவர் 55 சதம் விலையுள்ள 40 ஒற்றைக் கொப்பியை 60 சதமாக விற்றபோது திடீர்ப்பரிசோதனையில் ஈடுபட்டிருந்த விலைக்கட்டுப்பாட்டுக் குழு இவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்தது. இவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் திரு. சுப்பிரமணியம்; திரு. தர்மகுலசிங்கம், திரு. அழகேந்திரம், திரு. அரியரத்தினம் ஆகியோர் இடம்பெற்றனர். (கா-அ)

# பதுக்கல் வேட்டைக்கு விசேஷ குழு

## சில கடைக்காரர் பிடிபட்டனர்

சுண்டிக்குளி, செவ்.

யாழ். மாவட்ட வியாபாரிகளின் பதுக்கல்களையும் விலை மோசடிகளையும் கண்டுபிடித்துச் சட்டநடவடிக்கை எடுக்க யாழ். மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு இலாகா துரித நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்கான திடீர்பரிசோதனைகளை நடத்துவதற்கு திருவாளர்கள் ரி. சிதம்பரநாதன், எஸ். நவரெத்தினம், என். அருளானந்தன், எஸ். அழகேந்திரன், எஸ். தர்மகுலசிங்கம், எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் கொண்ட திடீர்பரிசோதனைக்குழு ஒன்று உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியினுல் விசேஷமாக நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல இடங்களிலும் வியாபாரிகளும் பெரும் வர்த்தக ஸ்தாபனங்களும் விலைக்கட்டுப்பாட்டை மீறியுள்ளதும் பல நோக்குக் கூட்டுறவு விற்பனைப் பகுதியில் விற்பனை செய்யப்படவேண்டிய பொருட்கள் தனியார் விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படுவதும் இக் குழுவினுல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவின் கீழ் கடமையாற்றும் திடீர் பரிசோதனைக்குழுவினர்யாழ். நவீனசந்தையில் உள்ள ஒரு வர்த்தகஸ்தாபனம் 45 ரூபா பெறுமதியான சேட் ஒன்றை 75 ரூபாவுக்கு விற்பனைசெய்கையில் கையும்மெய்யுமாக கண்டுபிடித்தனர்.

இத் திடீர் பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த திரு. ரி. சிதம்பரநாதன், திரு எஸ். நவரெத்தினம், திரு. என். நவரெத்தினம், திரு. என். அருளானந்தன் ஆகியோர் இந்த ஸ்தாபனத்தில்மறைத்து வைக்கப்பட்ட 150 ஷேர்ட்டுகளைக் கைப்பற்றி ரூபா 45 வீதம் கட்டுப்பாட்டுவிலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்தனர். (அ)

## திருட்டு அதிகரிப்பு

உடுப்பிட்டி, செவ்

நெல்லியடிப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்து வருகின்றது. இத்திருடர்கள் இரவு வேளைகளில் இப்பகுதிகளிலுள்ள வீடுகளில் நுழைந்து துணிவகைகள், கோழிகள் என்பனவற்றைத் திருடி வருகின்றனர்.

நெல்லியடியிலுள்ள தனியார் வைத்தியரொருவர் வீட்டில் திருடர் புகுந்து உடுதுணிகள், கோழிகள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். (அ)

# அரச வர்த்தமானி ஒருமாதத்தின் பின்னரே கிடைக்கிறதாம்

உடுப்பிட்டி, செவ்.

அரசாங்க வெளியிடான வர்த்தமானி (கசற்) கொழும்பில் வெளியாகி ஒருமாத காலத்தின் பின்னரே வடமராட்சிப் பகுதியை வந்தடைகின்றது.

இத் தாமதத்தால், வர்த்தமானியில் கோரப்படும் கேள்வி அறிவித்தல்கள், வேலை வாய்ப்பு அறிவித்தல்கள் போன்றவற்றைப் பெரிதும் நம்பியிருக்கின்ற இப் பகுதி மக்கள் அவற்றை விண்ணப்ப திகதி முடிவடைவதற்கு முன் அறிய முடியாமலிருக்கின்றது. இப்பகுதிக்கு வர்த்தமானி கிடைக்கப்பெறும்வேளை, வர்த்தமானியில் கோரப்படும் விண்ணப்பங்களின் கடைசித் திகதி முடிவடைந்துவிடுகின்றது.

இதனுல் இப் பகுதிமக்கள் வர்த்தமானி விஷயத்தில் ''கைக்கெட்டியும் வாய்க் கெட்டவில்லையே'' என்ற நிலையில் கவலைப்படுகிறுர்கள். (அ)

# 'செவ்வந்தி' சஞ்சிகை அறிமுக அரங்கு

யாழ்ப்பாணம், புதன்

கடந்த சனிக்கிழமை மாலை சிருஷ்டி இலக்கிய வாசகர்வட்டத்தினரால், சட்டம், கலை - இலக்கியத்துறைக்குப் பணியாற்றும் மாதஇதழான செவ்வந்திசஞ்சிகையின் அறிமுக விமர்சன ஆய்வரங்குபணிமனையில் நடாத்தப்பட்டது.

இலங்கையில் வெளிவரும் தரமான பத்திரிகைகளில் செவ்வந்தியும் ஒன்று. சிறந்த பல அம்சங்கள் இதில் அடங்கியுள்ளதனுல் அதிகமான வாசகர் வட்டத்தை இது மிகக்குறுகிய காலத்தில் உருவாக்கியுள்ளது. இதுபோன்ற பயன்தரும் சஞ்சிகைகள் மேலும் உருவாகி புதிய ஒரு இலக்கியப் பரம்பரையை உருவாக்கவேண்டும் என்று அறிமுக விமர்சன ஆய்வரங்கிற்குத் தலைமைதாங்கிய எழுத்தாளர் மு. பஷீர் கூறினுர்.

திரு. கே. கனகராஜா பேசுகையில் 'காளான்கள் தோன்றும் இடத்தில் ஒரு கற்பகத்தரு தோன்றியுள்ளது'. இப்போதுள்ள பெரும்பாலான வாசகர்கள் நச்சிலக்கியத்தையே பெரிதும் விரும்புகிறுர்கள்' நல்ல இலக்கியத்தை விரும்புவது குறைவு. செவ்வந்தி நல்ல இலக்கியம். வாசகர்கள்இதனை சீரணித்துக்கொள்வது கஷ்டம்' என்றுர்.

திரு. மொழிவாணம் பேசுகையில் சில சஞ்சிகைகள் தோன்றிய சுவட்டிலே மறையும் இந்தக்காலத்தில் செவ்வந்தி அந்த நிலையை அடையாது தொடர்ந்து சிறந்தஇலக்கியப்பணியை ஆற்றவேண்டும். அத்துடன் புனைகதைகளுக்கும் இடம்கொடுக்கவேண்டும்' என்றுர்.

திரு. ஏ. ராமநாதன் பேசுகையில் இறக்குமதிசெய்து படிக்கின்ற சஞ்சிகைகளைவிட செவ்வந்திபோன்ற சஞ்சிகை தரமானதாகவும் உயர்ந்ததாகவும் விளங்குகின்றது என்றுர். திரு. த. மணிபேசுகையில் நமக்குத்தெரியாத சட்டங்களைச் செவ்வந்தி ஏடு நன்கு விளக்கம் தந்திருக்கிறது. 'ஒருசட்டத்தரணியை ஆலோசனை கேட்பதைவிட செவ்வந்தியைப் படிப்பதால் பலன் பெறுகிறேம்' என்றுர்.

திரு. சுபாஸ் சந்திரபோஸ், ஜனப் எஸ். எச். எம் கதீஸ், திரு. வித்தகன் ஆகியோரும் உரையாற்றினர்.

...

## சாம்பியன்

நல்லூர், செவ்.

விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலமைந்துள்ள சனசமூகநிலையங்கள் விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றிற்கிடையிலான ரோரு வெற்றிக்கேடயத்திற்காக நடைபெற்ற உதைபந்தாட்ட 'ஏ' பிரிவு சுற்றுப்போட்டியில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டி சென் அன்ரனிஸ்விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டியை 5—2 கோல்களால் வெற்றி பெற்றுச் சாம்பியனுனது.

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், யாழ். உதவி அரசாங்க அதிபர்பிரிவு விளையாட்டதிகாரி திரு. ரி. நடராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

## ரயில்பிரயாணிகள் கஷ்டம்

உடுப்பிட்டி, செவ்

பருத்தித்துறை-கொடிகாமம் இரவு தபாற்சேவையிலீடுபடும் பஸ்சேவை படுமோசமாகவுள்ளது.

இச்சேவையிலீடுபடும் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் வண்டிகள் அடிக்கடி தாமதித்து வருவதால், இந்த சேவையைப் பெரிதும் நம்பியுள்ள புகையிரதப் பிரயாணிகள், புகையிரதத்தைக் கைவிட்டு வீடுதிரும்பவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இதனுல் இச்சேவையைநம்பியிராமல், தனியார் வாகனங்களை நம்பியிருக்க வேண்டிய அவலநிலை புகையிரதப்பிரயாணிகளுக்கு ஏற்பட்டுள்ளது. (அ)

......

## வீடுஎரிந்து சாம்பர்!

நெல்லியடி, செவ்

பட்டப் பகல் வேளையில் குடியிருக்கும் பாரிய வீடொன்று எரிந்து சாம்பலானது.

அல்வாய் மேற்கு திக்கத்தில் நடைபெற்ற இச்சம்பவததில் எஸ். தர்மலிங்கம் என்பவரின் வீடே இவ்வாறு எரிந்து சாம்பலானதாம்.

பட்டப் பகலில் இவ்வீடு தீப்பற்றி எரிந்தபோது தீயை அணைக்க எடுத்தமுயற்சிகள் பயனளிக்கவில்லையாம். மர்மமான முறையில் இவ்வீடு தீப்பற்றியமை குறித்துப் பருத்திததுறை பொலிசார் விசாரணை மேற்கொண்வருகின்றர். (அ)

......

## லைசென்ஸ் இன்றி வானெலிப்பெட்டி வைத்திருந்தனர்

நெல்லியடி, செவ்

வடமராட்சிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி வானெலிப் பெட்டிகளை வைத்திருப்போரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தபால் தந்தித் திணைக்கள உத்தியோகத்தர்களால் வானெலிப் பாவனையாளர் மத்தியில் அனுமதிப்பத்திரங்கள் திடீரெனப் பரிசீலனை செய்யப்பட்டுவருகின்றன.

நெல்லியடிப்பகுதியில் இப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டபோது அனுமதிப்பத்திரமின்றிப் பாவித்துவரப்படும் வானெலிப்பெட்டிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அனுமதிப்பத்திரமின்றி வானெலிப் பெட்டியை வைத்திருந்தவர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (அ)

ராணி யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
புரட்சித்தலைவர்
∴ எம். ஜி. ஆர் ∴ லதா
(இரு வேடங்களில்)
ஃ நிர்மலா ஃ நாகேஷ் ஃ ராஜ்ஸ்ரீ
கஜேந்திரா பிலிம்ஸாரின்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 58-வது நாள்
ஸ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா சிவாஜி — சரோஜாதேவி
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஆலயமணி
6-5-77 முதல்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

13-வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) ஜனத்திரள் நிறைந்த 3-வது வாரம்
Daily at 4-45.7-00&9-30p.m. only
a.m. 10-30 p.m. 2-30
அதிசயம்! ஆனால் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)
From 9-5-77 ALFIE DARLING

RIO
Entering Jaffna with Hilarious Comedy
LAUGH - LAUGH - LAUGH
HOLIDAY ON THE BUSES
We guarantee, you will have a really hot time.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
∵ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∵ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∵ சௌகார் ஜானகி, ∵ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.


மூதறிஞர் செல்வாவுக்கு

# சுருட்டுத் தொழிலாளர் மேதின விழாவில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், புதன்

மூதறிஞர் செல்வநாயகத்தின் மறைவுக்கு, தாவடியில் நடந்த இலங்கை சுருட்டுத் தொழிலாளர்களின் மேதினக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. சி.பொ. வ. மா.க முதலியார் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மூதறிஞர் செல்வாவின் ஆத்மசாந்திக்காக 3 நிமிடநேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 'தமிழ்இனத்தின் தலைவராக நின்று இலங்கைவாழ் மக்களுக்கு சாதி' மத, பேதமின்றி தமது தள்ளாத வயதிலும் அயராது உழைத்தவருமான தந்தை செல்வநாயகம்,மறைவு குறித்து இலங்கைவாழ் சுருட்டுத்தொழிலாளர் சார்பில் இலங்கை சுருட்டுத்தொழிலாளர்சங்கம் ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றது'.

திரு. முதலியார் பேசும் போது கூறியதாவது: 'அரசு சுருட்டுத்தொழிலை ஒருகூட்டுத்தாபனமாக்க பூர்வாங்க புள்ளி விபரம் எடுத்துச் செயல்படாதது வருத்தத்திற்குரியதாகும். அத்துடன் சிறிலங்கா புகையிலைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் அத்தன தொகுதியில் இயங்கிவந்த சுருட்டுத்தொழிற்சாலையை மூடியுள்ளது.

'இந்தத் தொழிற்சாலை யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்தால் மிகவும் லாபகரமான நிலையில் இயங்கி இருக்கும். காலதாமதமின்றி விரைவில் ஒருசுருட்டுத்தொழிற்சாலையை யாழ். மாவட்டத்தில், குறிப்பாக தொழிலாளர் கூடுதலாக வாழும் உடுவிலில் நிறுவவேண்டும்'.

செயலாளர் திரு. க. தங்கராசா பேசுகையில், தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையில்லாததினால்,தொழிலாளர்கூலியை முதலாளிகள் சுரண்டிவருவதாகக் கூறினர்.

திருவாளர்கள் வே. ஆறுமுகம், சி. பரமநாதன், செ. தம்பிராசா, இ. யோகநாதன், ஐ. இரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர்கள். (க)

## சனிக்கிழமை குருநகரில் அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன்

தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டமொன்று இம் மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சென். ஜேம்ஸ் சனசமூக நிலையத்திற்கு அருகே நிகழவிருக்கிறது. (கி. அ)

## மூதறிஞர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவு ஈழம் வாழ் தமிழ்மக்களுக்கு மட்டுமன்றி, அனைத்துலகம் வாழ் தமிழர்கள் அனைவருக்குமே பேரிழப்பாகும்.

சோதனைகள் பல சூழ்ந்த இந்த நெருக்கடியான காலகட்டத்தில் தந்தை தமிழர்கள் அனைவரையும் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டார். 'தமிழர்கள் வாழவேண்டின் தமிழன் தன்னை ஆளவேண்டும்' என்ற அன்னாரின் இறுதி இலட்சியத்தை அடைவதற்கு உழைப்பதே நாம் அவருக்குச் செய்யும் தொண்டாகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள தமிழ்மன்றம்வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
நாகேஸ்வரராவ்—பானுமதி
கானல்நீர்

பூலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
நீதிதேவன்
6, 7, 8-5-77
பொன்மணி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சாவித்திரி
வேட்டைக்காரன்


## செல்வா கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்

தந்தை செல்வா இறுதியாகக் கலந்துகொண்ட நிகழ்ச்சி என்னும் பெருமையை காங்கேசன்துறை கலைமகள் சனசமூகநிலையத்தினர் நடாத்திய நிகழ்ச்சி தட்டிக்கொண்டுள்ளது. இந்நிலையக் கல்விநிலையத் திறப்பு விழாவிலேயே தந்தை செல்வா இறுதியாகக் கலந்துகொண்டார். மறுநாள் மத்தியானம் செல்வா தமது இல்லத்தில் கால் தடுக்கி விழுந்து மூர்ச்சித்தார். (கி. அ)

## இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

பகல் அன்னதானமும் இரவு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும், சிவஸ்ரீ கா. கு. சுப்பிரமணியக்குருக்களின் கதாப்பிரசங்கமும் வில்லுப்பாட்டும் நடைபெறும்.

### பாண்டியன் குளத்தில்

வவனிக்குளம் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த பாண்டியன் குளம் பிள்ளையார்கோவிலில் நாளை வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. பகல் அன்னதானமும், இரவு விசேஷ கச்சேரிகளும் இடம்பெறும். [அ]

## யாழ். மாவட்டத்தில் இந்துஇளைஞர் கொடி நாள் 6-ம் திகதி கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

ஆண்டுதோறும் கொண்டாடப்படும் இந்து இளைஞர் கொடிநாள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட உள்ளது. 'யாழ். மாவட்டமெங்கும் அன்று கொடிநாள் கொண்டாடப்படுவதற்கான ஒழுங்குகள் முடிவடைந்துவிட்டதாக இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைமைச்செயலாளர் தெரிவித்தார்.

டாக்டர் வே. யோகநாதனைத் தலைவராகக்கொண்ட நல்லூர் இந்து இளைஞர் மன்றம் யாழ். நகர் முழுவதும் கொடிநாள் அமைப்புக்களை மேற்கொண்டுள்ளது. யாழ். இந்துமகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ். மத்தியகல்லூரி ஆகிய கல்லூரி முதல்வர்கள், கொடிநாள் வெற்றிபெற அமைய முழுமையான ஒத்துழைப்பு நல்க முன்வந்துள்ளார்கள்.

"இந்து இளைஞர்கள் முனைந்து முன்னேறவேண்டும்; இதன்மூலம் இளைஞர்களிடையுள்ள விரக்திமனப்பான்மை நீங்கி, பயனுள்ள பணிகளில் ஈடுபட்டுத் தமக்கும் பிறர்க்கும் சமூகத்துக்கும் பயன்படவேண்டும். இதற்கு இந்து இளைஞர் கொடிநாள் உதவட்டும்" என இந்துமகளிர் கல்லூரி முதல்வர் செல்வி இராமநாதன் கருத்துத்தெரிவித்தார்.

தீவுப்பகுதி, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, வவனியா, மன்னார் ஆகிய எல்லா இடங்களிலும் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள் மிகச்சிறப்பாக கொடிநாள் அமைப்புகளை மேற்கொண்டுள்ளன. (அ)

மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அவர் அனுப்பியுள்ளார்.

இச் சுற்றறிக்கையில் இலங்கை அடங்கிலும் உள்ள பாடசாலை அதிபர்கள், இந்து இளைஞர் கொடிநாளுக்குத் தாராளமாக ஒத்துழைப்பு நல்கவேண்டுமெனக் கேட்டுள்ளார். (அ)

### கல்வி அமைச்சு அனுமதி

இம்மாதம் 6-ம் திகதி நடைபெறும் கொடிநாள் பாடசாலைகளில் நடைபெறுவதற்கும், பாடசாலை மாணவர்கள் உதவுதற்கும், அனைத்து கல்வி மாஅதிபர் திரு. ஜோர்ஜ்மெண்டிஸ் அனுமதி வழங்கியுள்ளார்.

## விலை குறைந்தது

கொழும்பு, செவ்.

உழவு இயந்திர உதிரிப்பாகங்களின் விலைகளை 10 சதவீதத்தால் குறைக்க உழவு இயந்திரக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. (இ)

## மூதறிஞருக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

துரித நடவடிக்கைகள் எடுத்துவருகின்றனர்.

காங்கேசன்துறைப் பட்டின சபையில் கடைசியாக இடம்பெற்ற தலைவர் தெரிவில் மூதறிஞர்பெரும்பங்குஎடுத்து, அவரின் முடிவுக்கு அமையவே தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

## கூட்டணித்தலைமை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பிட்டி சிவாவுக்கேஎனக் கோஷமிட்டுக் கொண்டு வந்தனர். நியமனக்குழு உறுப்பினரான திரு. ரி. சிவசிதம்பரம் இவர்களைச் சந்தித்து இக் கோரிக்கையை நியமனக்குழுவில் சமர்ப்பிப்பதாக உறுதி அளித்ததை தொடர்ந்து அவர்கள் சென்றனர்.

முல்லைத்தீவிலிருந்து வந்த இளைஞர் கோஷ்டியொன்று முல்லைத்தீவுக்கு சிவாவே வேண்டும் எனக்கோஷமிட்டனர். இக் கோரிக்கையை காங்கிரஸ் தலைமைப்பீடம் மூலம் கூட்டணி நியமனக் குழுவிடம் சமர்ப்பிப்பதாக கூட்டணி நியமனக்குழுவிடம் சமர்ப்பிப்பதாக கூட்டணி உப-தலைவர் திரு. கா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். (க)

ஈழநாடு
The EELA NADU

# 12 மணி நேரத்தில்

## 1497 தொன் மா இறக்குமதி

### வடபகுதித் துறைமுகத் தொழிலாளர் சாதனை

யாழ்ப்பாணம், புதன்
இலங்கையின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக வடபகுதித் துறைமுகத் தொழிலாளர்கள் ஓர் அரும் பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்ட இட நெருக்கடி காரணமாக எம். வி. 'கொர்வியிலியா' என்ற யூகோஸ்லேவியக் கப்பல் 14089 தொன் ஆர் ஜன்டீஜு மாவுடன் காங்கேசன்துறைமுகத்திற்குத் திசை திருப்பப்பட்டது. இக்கப்பல் கடந்த மாதம் 22ம் திகதி மாலை காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறக்குமதி வேலைகளில், சுமார் 12 மணித்தியால வேலை நேரத்தில் வடபகுதித் துறைமுகத் தொழிலாளர்கள் 1497 தொன்னை (27571 மூடைகள்) இறக்குமதி செய்து ஒரு பெரும் சாதனையை நிலைநாட்டினர். இவ்வளவு தொகையான தொன்களை எந்தத் துறைமுகத்திலும் இவ்வளவு குறுகிய நேரத்தில் இறக்குமதி செய்யவில்லை.

இக்கப்பலிலிருந்து எட்டு நாட்கள் இதுவரை இறக்குமதி வேலைகள் நடைபெற்று 8912 தொன் மா மூடைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு ஆகக்கூடிய தொகை மூடைகளை ஏற்றி வந்த முதல் கப்பல் இதுவேயாகும்.

கடந்த பதினறு வருடங்களாக வடபகுதி துறைமுக இறக்குமதி வேலைகள் யாழ் மாவட்ட கூட்டுறவு துறைமுகத் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டுவந்தது. ஆனல் இக்கப்பலின் இறக்குமதி வேலைகள் யாவும் இலங்கை கப்பல் கூட்டுஸ்தாபனத்தின் வடமாகாண பிரதிநிதிகளான மெஸ்ஸர்ஸ் கே. ஜெயபாலசிங்கம் அன்ட் கம்பனியாரால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இக்கப்பலின் இறக்குமதி வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெறுவதால், இலங்கை அரசாங்கத்திற்குச் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வெளியூர்ச் செலவாணியாக ஆதாயம் ஏற்படுமென கப்பல் கம்பனி பிரதிநிதி திரு. க. ஜெயபாலசிங்கம் எமது நிருபரிடம் தெரிவித்தார். (அ)

## செல்வா மறைவுக்கு நாவலர் கட்சி அனுதாபம்

சென்னை, மே. 3
ஈழத் தமிழினத்தின் தந்தை மூதறிஞர் செல்வாவின் மறைவு குறித்து டாக்டர் இரா. நெடுஞ்செழியனின் கட்சியான மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் . அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

நேற்று நடைபெற்ற மக்கள் தி. மு. க. கூட்டத்தில் இந்த அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் இரா. நெடுஞ்செழியன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (இ)

## தந்தைக்கு கருணாநிதி அனுப்பிய மாலைகள்

யாழ்ப்பாணம், புதன்
தமிழகத் தலைவர்கள் பா.உ. சண்முகம், ஆற்காடு வீராசாமி இருவரிடமும் கலைஞர் கருணாநிதி கொடுத்தனுப்பிய விலை உயர்ந்த மாலைகள் இரண்டு தந்தை செல்வாவின் உருவப் படத்திற்கு அணிவிக்கப்பட்டுள்ளன.

வெண்ணிற பிளாஸ்ரிக் சீலையில் பொன்னிற நூலில்கோர்க்கப்பட்டுள்ள இம்மாலை காண்பவர் கண்களைக் கவர்கின்றது. வெண்ணிறமான இம் மாலைகள் கூட்டணி மண்டபத்தில் நிகழ்ந்த இரங்கற் கூட்டத்திற்கு முன் செல்வாவின் உருவப்படத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது.

மண்டபத்தின் நடுவே இருக்கும் பெரியஅளவிலான தந்தை செல்வாவின் படம் மலர்கள் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அப்படத்தின் முன் இரு குத்து விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. மண்டபத்துள் பிரவேசித்த பா. உ. சண்முகம், வீராசாமி, நாஞ்சில் மூவரும் முதலில் தந்தையின் படத்தின் முன் கைகூப்பினர். பின்னர் நாஞ்சில் குத்து விளக்குகளை ஏற்றி வைத்தார். அதனை அடுத்து கலைஞரின் மாலைகளை தந்தையின் உருவப்படத்திற்கு சூட்டி அஞ்சலியைச் செலுத்தினர். (கி-அ)

......

## 15 பேர் பலி!

பம்பாய், மே. 3
பம்பாயில் சட்டவிரோதமாகக் காய்ச்சிய சாராயத்தைக் குடித்த 15 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு வடகிழக்கு பம்பாயில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

# வெட்டிப் போட்டிருந்த இளைஞன் இவர்தான்!

## கரையூர் மணியும் மூவரும் கைது

யாழ்ப்பாணம், புதன
மல்லாகத்தில் பட்டப்பகலில் கழுத்தும் வயிறும் வெட்டப்பட்டுக் கிடந்த வாலிபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரென்றும் 25 வயதான இந்த வாலிபரின் பெயர் ஈ. ஜெயராசா என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இக்கொலை சம்பந்தமாக புலன்விசாரணை செய்த சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இ. ஏ. ஏ. காதர் சந்தேகத்தின் பேரில் கரையூர் மணி என்பவரையும் மற்றும் மூவரையும் சேந்தாங்குளத்தில் வைத்து கைது செய்தார்.

புலன் விசாரணை நீடிக்கிறது.

வேறு எங்கேயோ வைத்து வாலிபரைக் கொலை செய்துவிட்டு மல்லாகத்தில் கொண்டுவந்து போட்டிருக்கலாமெனப் பொலிசார் கருதுகின்றனர்.

இச் சம்பவம்தொடர்பாக ஏ 40 கார் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இக் கார் மானிப்பாயில் வாடகைக்கு பிடிக்கப்பட்டதாக பொலிஸ் விசாரணையில்தெரிய வந்துள்ளது.



யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் யாழ். மாநகர விசேஷ ஆணையாளருமான திரு. ஏ. ஏ. ஜோசப் அரசாங்க நிர்வாக சேவையில் முதலாம்தர முதல் வகுப்பில் உயர்த்தப்பட்டுள்ளார். அரசாங்க நிர்வாக சேவையில் இதுவே மிக உயர்ந்த பதவியாகும்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளராகவும் பணியாற்றிய திரு. ஜோசப் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றியுள்ளார்.

## "யாழ் ப.நோ.கூ. சங்கத்தின் இழப்பு"

அரியாலை, செவ்
"கடமையுணர்வும், கண்ணியமும் நிறைந்த ஊழியனுகப் பணியாற்றியதுடன் தனக்கென வாழாது பிறருக்கென வாழ்கிற ஒரு ஊழியராகப் பணியாற்றியதுடன், எந்த நேரமும் பிறருக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற நோக்குடன் பணியாற்றிய திரு. சிவானந்தனின் மறைவு யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவு ஊழியர்களுக்குமட்டுமல்ல, யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கே பெரிய நஷ்டமாகும்" என்று யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் காலஞ்சென்ற திரு. சிவானந்தனின் இறுதிச் சடங்கின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கனகரத்தினம், நீதிபதி கே. பாலகிட்டினர், முகாமையாளர் சார்பில் திரு. சுப்பிரமணியம், திருவாளர்கள் செல்லத்துரை, தம்பிமுத்து, பூபாலன் ஆகியோரும் அனுதாபம் தெரிவித்துப் பேசினர். (ஜி. அ)

## யாழ். முன்னாள் உதவிமேயர் மரணம்

யாழ்ப்பாணம். புதன்
யாழ். நகரின் முன்னாள் உதவிமேயர் திரு. என். மார்க்கண்டு காலமானார்.

சென்ற வெள்ளிக்கிழமை சைக்கிள்விபத்தில் சிக்கியதால் கழுத்தில் முறிவு ஏற்பட்ட திரு. மார்க்கண்டு உடனடியாகவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சென்ற திங்கட்கிழமை அவர் காலமானார். 48 வயதான திரு. மார்க்கண்டுவுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். அவரது மகளுக்கு ருதுசாந்திச் சடங்குக்கு, அவர் ஏற்பாடு செய்திருந்தார். அந்தத் தினத்திலேயே அவர் காலமானர்.

மாநகரசபை உறுப்பினராகவும், உதவி மேயராகவும் பணியாற்றிய திரு மார்க்கண்டு லங்கா சமசமாஜக்கட்சியின் நீண்டகால உறுப்பினராவார். ஈமக்கிரியைகள் இன்றுக லை நடைபெறும்.

## 234 தொகுதிகளிலும் தி.மு.க. போட்டியிடும்

சென்னை, மே, 3
எதிர்வரும் தமிழ்நாடு சட்டசபைத தேர்தலின்போது மாற்றுக் கட்சிகளுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்வது அசாத்தியமாகும் பட்சத்தில் சட்டசபையின் மொத்தம் 234 தொகுதிகளிலும் தி. மு. க. போட்டியிடும்என்று தி. மு. க. தலைவர் கலைஞர் திரு. மு. கருணாநிதி இன்று கும்பகோணத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

### மாரிசாமி ஜனதாவில்

இதேவேளை ராஜ்யசபாவின் மாஜி தி.மு.க. உறுப்பினரான திரு. எஸ்.எஸ். மாரிசாமிதாம் ஜனதா கட்சியில் சேர்ந்து விட்டதாக அறிவித்துள்ளார்.

தேசாபிமானம் உள்ள அனைவரும் ஜனதா கட்சியுடன் இணைய வேண்டும் என அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (உ)

## கூட்டணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டியைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழர் சிலரும் வந்திருந்தனர்.

### மன்னாரிலிருந்து யோண்மார்க்

மன்னார்த் தொகுதியில் திரு. யோண்மார்க்கையே கூட்டணிவேட்பாளராக நியமிக்கவேண்டுமென்று கோரி திரு. யோண்மார்க் தலைமையில் மன்னார்க் கிராமங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவராக இருபத்தைந்து பேர் கொண்ட கோஷ்டியொன்றும் கூட்டணித் தலைமை அலுவலகத்தின்முன் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தது.

தலைவர்களைச் சந்திக்க வேண்டுமென்று இந்தக் கோஷ்டியும் வற்புறுத்தியது.

### "வேறு எவரையும் அனுமதிக்க முடியாது"

எக்காரணம் கொண்டும் வேறு தொகுதியிலுள்ள ஒருவரை தாங்கள் தங்கள் அபேட்சகராக அனுமதிக்க முடியாதெனவும், வேண்டுமானல் திரு. இராசலிங்கத்தை தந்தை செல்வாவின் தொகுதியான காங்கேசன்துறைக்கு நியமியுங்கள் என்றும் கூறினார்கள்.

மூத்த தலைவராகிய திரு.மு. சிவசிதம்பரத்தை அவரைக் கேட்காமலேயே உடுப்பிட்டித் தொகுதிக்கு நியமிக்கவேண்டிய கூட்டணி, அவரதுபெருந்தன்மையை பலவீனமாகப் பாவித்துவிட்டது, எனவும் அவர்கள் கூறினார்கள்.

உடுப்பிட்டித் தொகுதிக்கு திரு. மு. சிவசிதம்பரத்தை நியமிக்கச் செபல்லி திரு. சிவலிங்கம், திரு. குணசிங்கராஜா, திரு: நடராசா, திரு. வி. எஸ். கந்தப்பு, திரு. க. செல்லன் ஆகியவர்கள் திரு. கதிரவேற்பிள்ளையிடம் எடுத்துக் கூறினர்கள். (க-உ)

## இன்று அன்னதானம்

யாழ்ப்பாணம்,புதன்
பௌர்ணமி தோறும் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் வழங்கப்படும் அன்னதானம் இன்று வழங்கப்படுமென திரு. ராஜராஜேஜசுவரன் தங்கராசா தெரிவித்தார்.

## ஆலால் சுகயீனம்

யாழ்ப்பாணம்,புதன்
தந்தை செல்வநாயகம் காலமான நேரத்திலிருந்து அஸ்தி எடுத்தநாள்வரை இரவு பகலாக ஓடித்திரிந்து பணியாற்றிய சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் நேற்று திடீரென சுகயீனமுற்ருர். கடும் காச்சலால் பீடிக்கப்பட்டுள்ள அவரை இளைஞர்கள் பலர் சென்று பார்த்தனர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம்—மார்க்கண்டு

முன்னைநாள் யாழ்.மாநகரசபை உதவி மேயரும், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் போர்மனுமான நாகலிங்கம் மார்க்கண்டு காலமாகிவிட்டார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிறீசங்கர் ரவிசங்கர், வாசுகி, கீர்த்திசங்கர், வளர்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்: அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக 82/3 கச்சேரி நல்லூர் வீதியிலிருந்து இன்று புதன்கிழமை காலை 8மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

6086